# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஜூலை 2003 ஜீவியம் 9 மலர் 3**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 6 |
| லைப் டிவைன் | 7 |
| எங்கள் குடும்பம் | 21 |
| அஜெண்டா | 37 |
| சத்திய ஜீவன் | 39 |
| அன்பர் கடிதம் | 43 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 45 |
| சாவித்ரி | 57 |
| யார் சாதகர் | 59 |
| லைப் டிவைன் - கருத்து | 62 |


✯ ✯ ✯

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**776) கொள்ளை, சூறை, போர் மூலம் நாகரீகம் எழுகிறது.**

நாகரீகம் வேகமாக முன்னேற்றம் பெறும் நேரம் எதிர்ப்பு இருந்தால் இயற்கை அவற்றை துவம்சம் செய்து முன்னே போகிறது. அதனால் இவை எழுகின்றன.

☆ ☆ ☆

**777) மனம் தெளிவு பெறுமுன் பைத்தியம் போன்ற மனநிலை எழும்.**

ஆற்றில் வெள்ளம் வந்து தெளியுமுன் தண்ணீர் கலங்கலாக, குழம்பாக வருவதுபோல் மனம் தெளிவு பெறுவதன்முன் கலங்கி நிற்கும்.

☆ ☆ ☆

**778) பைத்தியம், குழப்பம், துரோகம், வேதனை, கொடுமை ஆகியவை மனம், உணர்வு, உடல் திருவுருமாற்றமடைய தவிர்க்க முடியாத பாதைகள்.**

***மாறும் வழிகள் மனம் ஏற்கக் கூடியதில்லை.***

மனிதன் திருவுருமாறும் வழிகள் கடுமையானவை. பைத்தியம், குழப்பம், துரோகம், வேதனை, கொடுமை ஆகியவை அம்மார்க்கங்கள். மாட்டுக்கு நோய் வந்தால் அதற்குச் சூடு போடுவதுபோல், முந்தைய நாளில் மனிதனுக்குச் சூடு போட்டு வியாதியைக் குணப்படுத்துவார்கள். கை, கால் ஒடிந்துவிட்டால், வாளால் அறுத்து எடுப்பார்கள். இவற்றை மனிதன் ஏற்க முடியுமா? இதுவேதான் திருவுருமாற்ற வழியா? அன்னையை ஏற்றுக்கொண்டால், மயக்க மருந்து வலியை ஏற்பதுபோல், அன்னை ஜீவியம் நம் வலியை ஏற்கும். நமக்குத் திருவுருமாற்றம் கிடைக்கும்.

☆ ☆ ☆

**779) தனக்குத் துரோகமிழைக்கும் சக்திகளை அழைத்து, வேதனை தரும் வாழ்வை ஏற்படுத்தி, அதையே எதிர்கால உலகின் கருவாக அன்னை நியமித்தார்.**

***யோகத்தை ஆதாயத்திற்காக ஏற்றால், யோகம் துரோகத்தால் நிறைவேறும்.***

பள்ளிக்கூடத்தில் பாடம் படிக்க ஆர்வமிருக்கும். பாடம் புரியாவிட்டால் கசப்பாக இருக்கும். பாடம் புரிந்தாலும், கசப்பாக இருந்தாலும் படிப்பு பலன் தரும். யோகத்தை பக்திக்காக இலட்சியமாக ஏற்றால், பலன் அமிர்தமாகும். ஆதாயத்திற்காக ஏற்றால் யோகப் பலன் வரும். வரும் வழிகள் நாம் யோகத்தை ஏற்றதுபோல் அமையும்.

☆ ☆ ☆

**780) ஆஸ்ரமத்தை 'வேறு காரணத்திற்காக' ஏற்படுத்தினேன் என்று பகவான் கூறும் வேறு காரணம் இதுவே.**

***பகவான் கூறும் வேறு காரணம்.***

ஏன் இலட்சியப் புருஷர்களைச் சேர்த்து ஆசிரமம் ஏற்படுத்தவில்லை என்ற கேள்விக்கு பகவான் கூறிய பதில் இது. ஒரு வீட்டில் படித்த பிள்ளைகள் வேலை கிடைத்தால் வேலைக்குப் போவார்கள். படிக்காதவர்கள் கடை வியாபாரம் செய்வார்கள்.

கடைசிக் காலத்தில் பார்த்தால் வேலைக்குப் போனவர்களைவிட வியாபாரம் செய்தவர்கள் செல்வர்களாக இருப்பார்கள். படித்த பிள்ளைகட்கு சர்க்கார் வேலை கிடைத்தபின் வியாபாரம் செய் என்றால் செய்யப் போவதில்லை. அவர்களைக் கூப்பிட்டுப் பயனில்லை. பின்னால் பெரும் பலன் பெறத் தகுதியானவர்கள் இப்பொழுது தகுதியற்றவர்களாக இருப்பதுண்டு. அவர்களுடைய எதிர்காலம் இருவகைகளாகவும் அமையும்.

- **பெருஞ் செல்வர்களாக வாழ்க்கையை முடிப்பவர்கள்.**
- **சம்பளமாக மற்றவர் சம்பாதித்ததும் சம்பாதிக்க முடியாமல் வியாபாரம் நஷ்டமாகி நடுத்தெருவில் நிற்பவர்கள்.**

☆ ☆ ☆

**781) பெருங்குழப்பம், செய்வதறியாது திகைத்த மனநிலை, நம்பிக்கைத் துரோகம், தாள முடியாத மன வேதனை, நோய், மிருகத்தனமான கொடுமை ஆகியவை தவிர்க்க முடியாத திருவுருமாற்றத்தின் தேவைகளாகும்.**

*தாள முடியாத வேதனை தவிர்க்க முடியாத நிபந்தனை.*

அன்னையை ஏற்று பக்தர்களாகவே இருப்பவர்கட்குத் தோல்வியே இல்லை. நிலையான சந்தோஷம் உண்டு. பக்தர் நிலையைக் கடந்து சாதகர் நிலையை ஏற்றால், வெற்றியேயில்லை என்ற நிலை உருவாகும். வேதனை வரும். இது பக்தருடைய தோல்வியில்லை, வேதனையில்லை, உலகத்துத் தோல்வியை உலகத்தின் சார்பாக ஏற்கும் பக்தர், சாதகராகிறார். அவர் பெறும் தொடர்ந்த தோல்வியால் உலகில் தோல்வியே அழியும். அதை ஏற்பவருக்கு அதற்குரிய வேதனையுண்டு.

☆ ☆ ☆



**782) *The Life Divine*ஐப் படிக்கும்பொழுது "விசாரத்தைப்" பல்வேறு கோணங்களில் மேற்கொள்ளலாம்.**

**(உ.ம்.) "ஆதி மனிதனின் ஆர்வமே இன்றும் நம் அபிலாஷையாக இருக்கிறது".**

*விசாரத்திற்குரிய நூல் The Life Divine.*

நூலின் 56 அத்தியாயங்களும் ஒரு தத்துவத்தை விளக்குகின்றன. உதாரணமாக முதல் அத்தியாயம் 'முரண்பாடே உடன்பாடு' என்பதைத் தெரிவிக்கிறது. இதுபோக அடிப்படையான பெரிய கருத்துகள் சுமார் 50 முதல் 100 வரை நூல் நமக்குத் தருகிறது. நமது அடிப்படை குடும்ப வாழ்வு. சமூகம் அதன் அஸ்திவாரம். சமூகத்தின் பின்னணியில் உள்ளது வாழ்வு. இவ்வாழ்வு பிரபஞ்சத்தைவிடப் பெரியது என்கிறார். பிரபஞ்சமே அழிந்தாலும், வாழ்வு நிலைக்கும் என்கிறார். இவ்வாழ்வுக்குரிய உண்மைகள் அவை. உதாரணமாக பிரபஞ்சத்தில் அறிவால் காணக்கூடிய உண்மையொன்று உண்டானால், அதை அறியும் திறன் மனிதனில் இருக்கும் என்கிறார். சிந்தனை, ஆராய்ச்சி, விசாரம் தேவைப்பட்டால் அவர்கட்கு சிறந்த அரங்கம் *The Life Divine*.

*தொடரும்...*

☆ ☆ ☆

**ஜீவிய மணி**

ஜீவன் நீரோட்டத்திற்கு;

உருவம் நீர்க்குமிழிக்கு.

# இம்மாதச் செய்தி

**காதல் மனிதனைத் தெய்வமாக்கும். மனிதனுடைய காதல் வேகம் அவனுடைய காந்தனில்தான் தணியும். மனித இதயத்தில் தெரியும் காதல் நாயகன் காந்தன் மனித வாழ்வுக்குரியவனல்லன்.**

❂❂❂❂❂❂





## லைப் டிவைன்

கர்மயோகி

### 11. ஆனந்தம் - கேள்வி

பிரம்மம் என்பதையோ, சத் என்று கூறுவதையோ நாம் சிருஷ்டிக்கு ஆரம்பம் எனக் கொள்வோம். பிரம்மத்தையே முடிவு எனவும், அனைத்தும் எனவும் கூறலாம். பிரம்மம் என்றால் தன்னை அறிந்தது எனப் பொருள். தன்னையறிவது ஜீவியம். இந்த ஜீவியம், அதன் ஜீவனிலிருந்து பிரிந்ததன்று. பிரிக்க முடியாதது. பிரம்மம் ஜீவியத்தின் சலனத்தால், சக்தியாக வெளிவருகிறது. இது சிருஷ்டித் திறனுள்ளது. சக்தி, ரூபம், உலகங்களைச் சிருஷ்டிக்கவல்லது. இவற்றையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டாலும், ஒரு கேள்வி பாக்கியாக இருக்கிறது. அதற்கு விடை தேவை. ஏன் பிரம்மம் சக்தியாக வெளிப்படவேண்டும்? ஏன் இந்த ஜீவிய சக்தி ரூபங்களாலான உலகை சிருஷ்டிக்க வேண்டும்? பிரபலமான பதில் ஒன்றுண்டு. அது சக்தியின் இயல்பு என்பது அப்பதில். சலனம் இருப்பதால் சிருஷ்டிக்கின்றது. உருவகம் உருவத்தை உண்டு பண்ணுகிறது என்கின்றனர். ஏற்கனவே நாம் இப்பதிலை மறுத்துவிட்டோம். பிரம்மத்திற்குச் சலனம் உண்டு, உருவகம் உண்டு என்பது உண்மை. ஆனால் அவற்றால் பிரம்மத்தைக் கட்டாயப்படுத்த முடியாது. **பிரம்மம் சுதந்திரமானது. அதற்கு அசையும் உரிமையுண்டு என்பதுபோல் அசையாமலிருக்கவும் உரிமையுண்டு**. ரூபங்களை உற்பத்தி செய்வது பிரம்மத்தின் உரிமை என்பதுபோல், அந்த உரிமையைச் செயல்படுத்தாமலிருக்கவும் பிரம்மத்திற்குச் சுதந்திரம் உண்டு. அதுவே உண்மையானால் சலனம், ரூபம் இரு குணங்களைத்

தன் இஷ்டப்படி வெளிப்படுத்துகிறது. அதற்குக் காரணம் என்று ஒன்று இருந்தால் அது ஆனந்தமாகவே இருக்க முடியும்.

வேதாந்தம் சத் என்பதைக் கண்டது. சத் என்பதே ஆரம்பம், ஆதி. அது வறண்டதன்று. அதற்கு ஜீவியமுமில்லை. ஜீவியம் முரட்டு சக்தியுடையதுமில்லை. சத் என்பது ஜீவியமுள்ள ஜீவன். **அது ஆனந்த மயமானது. இது பிரம்மமான சத் என்பதால், சூன்யம் என்பதற்கு வழியில்லை**. ஜீவியமற்ற இருளுக்கும் வழியில்லை. குறை என்பதில்லை. திறனில்லை என்பதில்லை. ஆனந்தமில்லை என்பதுமில்லை. சூன்யம், ஜீவியமற்ற நிலை, ஆனந்தமற்ற நிலைகளில் எது இருந்தாலும், அது பிரம்மமாகாது. ஜீவியமுள்ள சத்தின் பிரம்மம் என்பது அளவிறந்த ஆனந்தமயமான ஜீவியமுள்ள சத்தாகும். சத் என்பதும், ஜீவியம் என்பதும், ஆனந்தம் என்பதும் ஒன்றின் மறு பெயர்கள். **அளவில்லை என்பது ஆனந்தம். முடிவில்லை என்பதும் ஆனந்தம். பிரம்மம் என்பதே ஆனந்தம்**. மனிதனின் சிறு வாழ்விற்கும் இந்த அனுபவம் உண்டு. அதிருப்தி என்பது அளவு, தடை. இல்லை என்பதைப் பெறுவது திருப்தி. அளவைக் கடப்பது சந்தோஷம். தடையை உடைப்பது ஆனந்தம். இந்த அம்சம் இருப்பதற்குக் காரணம் நம் ஜீவனின் ஆதி பிரம்மம். அந்த ஜீவனுக்கு முடிவற்றது சொந்தம். சுய ஜீவியமும், சுயமான சக்தியும் அதற்கு அளவில்லாமல் உண்டு. சுயமான ஆட்சி அதற்குண்டு. சுயமான ஆட்சிக்கு சுயமான ஆனந்தம் எனப் பெயர். சிருஷ்டி சுயமான ஆட்சியை ஸ்பர்சித்தால் அந்த அளவில் அதற்கு ஆனந்தமுண்டு. அதுவே சிருஷ்டிக்குரிய திருப்தி.

தன் ஜீவனை பிரம்மம் சுயமாக அறியும். சுயமாக அறிவது பிரம்மமானது. அசைவோ, சலனமோ இல்லாத ஆட்சி மட்டும் பிரம்மத்தின் சுய ஆனந்தமில்லை. அதன் ஜீவிய சக்திக்கு முடிவற்ற ரூபங்களை சிருஷ்டிக்க முடியும். ரூபங்கள் மாறும். மாறுவதற்கு



அளவில்லை. ஆனந்தம் அதனுடையது. அது சுய ஆனந்தம். அதற்குச் சலனமுண்டு. அவ்வானந்தமும் மாறும். ஆனந்தம் அளவற்று அசையும். அசைவும் மாறக்கூடியது. இவை கோடிக்கணக்கான பிரபஞ்சங்கள். இது லீலை. அதனின்று முடிவற்ற சலனம் முழுமாற்றத்துடன் எழும். அவை ஆனந்த ரூபங்கள், அளவிறந்து மாறுபவை. ஆனந்தத்தை அனுபவிப்பது இலட்சியம். சக்தியின் லீலை பரந்தது, சிருஷ்டித்திறனுள்ளது.

சச்சிதானந்தம் சத்-சித்-ஆனந்தம். அவை வெவ்வேறான மூன்றல்ல. ஒன்றின் மூன்று அம்சங்கள். அதன் ஜீவியம் சிருஷ்டிக்கும். தன்னை வெளிப்படுத்தும் சக்தி அது. முடிவற்ற நிகழ்ச்சிகளாகும் தன்மையுடையது. அதன் ரூபங்கள் சுயஜீவிய ஜீவனுடையவை. முடிவற்ற மாற்றம் அதன் தன்மை. மாறும் ஆனந்தத்தை சச்சிதானந்தம் அனுபவிக்கிறது. சச்சிதானந்தம் தவிர உலகில் மற்றவையில்லை. அவை சத்தின் மறு ரூபங்கள் அல்லது ஜீவியத்தின் வேறு உருவங்கள். நாம் காணும் மாறுபடும் ரூபங்கள் அந்த மாறாத ஒன்றின் மாற்று உருவங்கள். பெரியது ஒன்று, அது அகண்டம், அனந்தம். அது அளவற்ற கண்டமாக, அந்தமாக, சிறியதாக மாறும். சச்சிதானந்தம் மாறாதது எனவும், அனைத்தையும் தன்னுட் கொண்டது எனவும் நாமறிவோம். சச்சிதானந்தம் என்பது ஆனந்தம். சத்தின் சுய ஆனந்த ரூபம். உலகில் நாமறிவனவெல்லாம் ஒன்றின் மாறிய ரூபங்கள். ஜீவனுள்ள சக்தி அவற்றுள் உறைகிறது. ஒவ்வொன்றிலும் அது உறைகிறது. நாம் ஒன்றை அதுவாக அறிவது அதனுள் ஜீவனுள்ள சக்தி உறைவதால்தான். மாம்பழத்தை நாம் மாம்பழமாக அறிவதற்குக் காரணம் அதனுள் ஆத்மா இருப்பதால்தான். அதேபோல் உலகில் உள்ள அனைத்தும் ஆனந்தமயமானது. வைரம் வைரமாக இருப்பதற்கு அதனுள் உறையும் ஆனந்தமே காரணம்.

இதுவே வேதாந்தம் கூறும் சிருஷ்டியின் தத்துவம். மனம் உடனே இரு கேள்விகளை எழுப்புகிறது. அவை பலமான இரு முரண்பாடுகள். உணர்வும் உடலும் பெறும் வலி ஒன்று. அடுத்தது தவறு, தீமை, கொடுமை என்ற தர்ம நியாயம். உலகம் சச்சிதானந்தம் என்கிறோம். அப்படியானால், சத் என்பது ஜீவியம். அதேபோல் சத் என்பது ஆனந்தமாகிறது. வலி, கவலை, துன்பம் உலகெங்கும் மலிந்துள்ளது. அவற்றை எப்படிப் புரிந்துகொள்வது? இவ்வுலகைத் துன்ப லோகமாகக் காண்கிறோம். நம் தத்துவம் இதை ஆனந்த லோகமாக்கக் கூறுகிறது. அதனால் தவறு அல்லது மிகைப்படுத்திக் கூறுதல் உளது. பார்வையில் தவறுள்ளது. நாம் உலகை உணர்விலிருந்து விடுபட்டு அறியலாம். சரியாக அறிய முயலலாம். அது நம் கண்ணோட்டமாக இருக்கலாம். உணர்ச்சியை விட்டு விலகி அறிந்ததாக இருக்கலாம். அப்படிப் பார்க்கும்பொழுது உலகில் துன்பத்தைவிட இன்பம் அதிகமாக இருக்கிறது என்று தெரியும். உலகின் இன்பங்களைத் தொகுக்கலாம். துன்பங்களையும் தொகைப்படுத்தலாம். இன்பத்தின் தொகை, துன்பத்தின் தொகுப்பைவிட அதிகம் எனத் தெரியும். தனிப்பட்டவர் சிலர் வாழ்வில் துன்பம், இன்பத்தைவிட அதிகமாக இருக்கலாம். நம் இயல்பான சுபாவம் சுறுசுறுப்பானதும், அமைதியானதுமாகும். அது மேலே அல்லது உள்ளேயிருக்கும். என்றாலும் அத்தனையும் இன்ப அனுபவங்களே. வலி என்றும் உள்ளதன்று. அது விலக்கு. நமது இயல்பான நிலை இல்லாவிட்டால் வலி எழும். இயல்பான வாழ்வுக்கு மேலேயுள்ளது அது. இன்பத்தைவிட துன்பம் நம்மை பாதிப்பதற்குக் காரணம், வலி எப்பொழுதாவது வருவதேயாகும். இன்பத் தொகுப்பு நமக்கு அதிக அனுபவமாகும். வலி நமக்குச் சிறிய அனுபவம். என்றோ எழும் வலி இயல்பான சந்தோஷத்தைவிட அதிகமாகப் பாதிப்பது இயற்கையன்றோ! நாம் அனுதினமும் அனுபவிக்கும் இன்பம் கண்ணில் படுவதில்லை. அதை நாம் பொக்கிஷமாகக் கருதுவதில்லை. உடல் இன்பம் தீவிரமாகி சந்தோஷமாகும். அப்படி உயரும் உணர்வு



நமக்குத் தெரிகிறது. அந்நிலையில் அது பூரிப்பாகும். நாம் அதை ஆனந்தம் என்கிறோம். அதனால் ஆனந்தத்தை நாடுகிறோம். நாம் வாழ்வில் காணும் திருப்தி நடுநிலைக்குரியது. வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளினூடே நம் திருப்தி நிலவுகிறது. அதற்குக் குறிப்பிட்ட நிகழ்ச்சியோ, பொருளோ தேவையில்லை. நடுநிலையான வாழ்வு இன்பமோ, துன்பமோ தருவதில்லை. அதுபோன்ற வாழ்வு யதார்த்தம். அவ்வாழ்வு உயிரைக் காப்பாற்றும். அது பொது. பிரபஞ்சம் முழுவதும் பரவியது. நாம் அதை நாடுவதில்லை. நமக்கு இன்ப, துன்பங்களுக்குரிய வரவு, செலவு கணக்குண்டு. இன்பம் வரவு, துன்பம் செலவு. உள்ளமும், உடலும் உணரும் வரவும் செலவுமாகும் அந்தக் கணக்கு. என்றும் உள்ள நிரந்தரமான நிலை அக்கணக்கில் எழுதப்படுவதில்லை. நாம் உணரும் தீவிர இன்பங்களும், உடலை வருத்தும் வேதனையும் உண்டு. அவற்றை மட்டும் கணக்கில் எழுதுவோம். **வலி வழக்கத்திற்கு மாறானது என்பதால் நாம் அதைக் கணக்கில் சேர்த்துக்கொள்கிறோம்**. நமக்கு வலி பொறுக்க முடியாதது. நம் வாழ்வுக்கு வலி துரோக உணர்வு. நம் வாழ்வின் அடிப்படைக்கு அது எதிர். வலி நம்மைத் தாக்குவதாக அறிகிறோம்.

நாம் பேசுவது தத்துவம். என்றோ ஒரு நாள் அனுபவிப்பதால் தத்துவத்தை விளக்க முடியாது. ஏற்றமும், தாழ்வும், என்றும் உள்ளதைப் பாதிக்காது. ஏதோ ஒரு சமயம் வருவதும் கணக்கில் சேராது. **கூடவா, குறைவா, இருப்பதே கேள்வி. அதற்கு விளக்கம் தேவை.** அனைத்தும் சச்சிதானந்தமானால், வலி எப்படி எழும்? வேதனை எங்கிருந்து உற்பத்தியாகிறது? இதுவே கேள்வி. தர்மம் வரும்பொழுது குழப்பம் வருகிறது. அது பொய்யான பிரச்சினை. கடவுளை நாம் நம் போன்ற ஒருவராகக் கருதுவதால், வலி கேள்வியாகிறது. உலகைக் கடந்தவர் கடவுள் என்றால் பிரச்சினை, சிக்கலாகிறது. இது பகுதியான கேள்வி.

சச்சிதானந்தம் கடவுள். சச்சிதானந்தம் தன்னையறியும் புருஷன். அதுவே சிருஷ்டிக்கர்த்தா. அவருடைய உலகில் அவர் படைத்த மனிதனுக்கு எப்படி வேதனையை அவரால் சிருஷ்டிக்க முடியும்? கொடுமைக்கு உத்தரவளிக்க முடியும்? கடவுள் நல்லவர் எனில் தீமையைப் படைத்தவர் யார்? வலி சோதனை என்றாலும், வேதனை என்றாலும் தர்மத்திற்குப் பதில் கிடைக்காது. அதை ஏற்றால் கடவுளுக்குத் தர்மமில்லை. அல்லது கடவுள் தர்மத்தைக் கடந்தவர் என்றாகும். உலகை நடத்தும் என்ஜினீயராகவோ, அல்லது சித்ரவதையைக் கண்டுபிடித்தவராகவோ கடவுள் ஆவார். அன்பும், நன்மையும் உருவானவராகமாட்டார். கடவுள் பலம் பொருந்தியவராவார். அவர் சட்டத்திற்குக் கீழ்ப்படியலாம், அல்லது அவரைத் துதிக்கலாம். கடவுள் கொடுமையை வதை செய்ய உற்பத்தி செய்தவரானால், அவர் கொடுமையானவர். அவருக்கு உணர்வோ, கருணையோயில்லை. கடவுள் தர்மத்திற்குக் கட்டுப்பட்டவரெனில், அவர் மனிதர்களைவிட மட்டமானவர். மனிதர்களில் சிறந்தவரைவிட மட்டமானவர் என்பது உண்மை. வலி அநியாயத்தின் பரிசு என்று நாம் கூற முடிவு செய்வோம். இயற்கையான தண்டனை என்கிறோம். அப்படிக் கூறினாலும், அதன் மூலத்திற்குப் பதில் இல்லை. யார் வலியை ஏற்படுத்தியது? ஏன் ஏற்படுத்தினார்கள்? தண்டிக்க வேண்டிய அநியாயம் எங்கிருந்து வந்தது? இந்த பதில்கள் வாழ்க்கை அனுபவத்திலிருந்து பார்த்தால் சரியாக இல்லை. போன ஜென்ம பாவத்திற்குத் தண்டனை என்றால் விளக்கம் சரி. அநியாயம் மனத்தின் வியாதி அல்லது அறியாமை. மனம் வியாதியுற்றால், சித்ரவதை எப்படிக் குணப்படுத்தும்? தண்டனை மிக அதிகமாகவும், கொடுங்கோலாகவும் காண்கிறது. கடவுள் தெய்வம் எனவும், உயர்ந்தவர் எனவும் கூறுகிறோம். கர்மம் தவிர்க்க முடியாதது. இவையிரண்டும் ஒத்துவாரா. எனவே புத்தர் கர்மமில்லை என்றார். அவர் கடவுளை ஏற்கவில்லை. கடவுள் சுதந்திரமானவர் என்றோ உலகை ஆள்பவரென்றோ புத்தர் ஏற்கவில்லை. சுபாவம் அறியாமை



என்றார். எனவே கர்மம் கட்டுப்படுத்துகின்றது எனவும் புத்தர் கூறினார்.

கடவுள் நல்லவர், அன்புருவானவர். உலகைக் கடந்த கடவுள் என்ற கருத்தை ஆராய்வோம். அவர் உலகமல்லர். அவர் நன்மை தீமையைப் படைத்தார். அவர் படைப்பான மக்கள் வலியை அனுபவிக்கின்றனர். அவர் எட்ட இருக்கின்றார். அத்துன்பம் அவரைப் பாதிப்பதில்லை. அவர் உலகைக் கண்காணிக்கிறார், ஆட்சி செய்கிறார், அவர் ஆணை செல்கிறது, அல்லது ஆணை செல்லவில்லை. வேதனையில் உழலும், போராடும் உலகுக்காக இத்தனையும் கடவுள் செய்கிறார். உலகைத் தம் சட்டப்படி ஆள்கிறார். அவர் உலகுக்கு உதவுவதில்லை. அக்கடவுள் எல்லாம் வல்லவரில்லை, அன்புருவானவரில்லை, நன்மையே உருவானவருமில்லை. இப்படி நாம் கருதுவது பிரச்சினையைத் தீவிரமாக்குகிறது. உலகைக் கடந்தவர் கடவுள் என்ற தத்துவம் கொடுமையையும் துன்பத்தையும் விளக்க இயலாது. பேச்சு சாதுர்யமாக இருக்கலாம். அது பிரச்சினைக்குரிய பதில் தாராது. அப்பதில் திருப்தியாக இருக்காது. நாம் நேரடியாகப் பதில் கூறவேண்டும். அல்லது கடவுளையும் அவர் செயல்களும் சரி எனக்கொண்டு, அவர் குறைகளைப் பாராட்டக் கூடாது. அது கடவுளாகாது, அசுரனாகும். அது வேதாந்தம் கூறும் சச்சிதானந்தமில்லை. சச்சிதானந்தம் ஏகன், அடுத்தது இல்லை என்கிறது வேதாந்தம். அது அப்படிப்பட்ட சத். இருப்பதெல்லாம் அவனே. கொடுமையிருந்தால் அவன் படைத்த ஜீவராசிகளில் அக்கொடுமையை அனுபவிப்பவன் அவனே. ஜீவராசிகளுள் உள்ளவன் அவனே. ஜீவராசிகளின் துன்பத்தை அவனே அனுபவிக்க வேண்டும். இது பிரச்சினையை மாற்றிக் கூறுவதாகும். கொடுமையும், துன்பமும் அன்புக்கும் நன்மைக்கும் எதிரானவை. இப்படிக் கருதினால் பிரச்சினை வேறு. எப்படிக் கடவுள் கொடுமையை சிருஷ்டித்தார்? எப்படி அவர் மட்டும் அதிலிருந்து தப்பினார் என்பது கேள்வியில்லை.

ஆனந்தமயமான ஆண்டவன் ஆனந்தமற்றதை - கொடுமையை - எப்படி அனுமதித்தார் என்பது கேள்வி.

தர்மசங்கடம் பாதி போய்விடும். தர்மசங்கடத்திற்குப் பதிலில்லை. இனி அக்கேள்வி எழாது. கடவுள் நம்மைக் கொடுமைக்கு ஆளாக்கினார். அவர் விலகிவிட்டார் என்கிறோம். கடவுள் மனிதனின் தலைவிதியில் பங்கு கொண்டாலும், விலகி நின்றாலும், இது உண்மை. கடவுள் தனக்கே கொடுமை இழைத்துக்கொள்கிறார் என்பது ஓர் அபிப்பிராயம். எப்படிக் கூறினாலும், தர்மம் சங்கடமாகவே இருக்கிறது. இதை வேறு வழியாகக் கூறலாம். ஆனந்தமயமான ஆண்டவன் நன்மையின் நல்லுருவம். அன்பின் திருவுருவம். கொடுமையும், வேதனையும் சச்சிதானந்தத்திற்கேது? கடவுள் யந்திரமில்லை. ஆண்டவன் புருஷன், ஜீவன். கொடுமையை மறுக்கவும், கண்டிக்கும் உரிமையும் உண்டு. இங்கு அடிப்படையான தவறுள்ளது. நாம் பகுதியின் சட்டத்தை முழுமைக்குரியதாக்கினால் தவறு வரும். நாம் அன்பையும் நல்லதையும் ஏற்கிறோம். அதை ஆனந்தத்திற்கும் எடுத்துச் செல்கிறோம். நம் எண்ணங்கள் பிரிவினையில் எழுந்தவை, அவை இரு பகுதிகளானவை. ஒருவர் மற்றவரிடம் கொள்ளும் தொடர்புக்கு இந்தச் சட்டங்கள் சரி. இந்தச் சட்டத்தை ஏகனான பரமாத்மாவுக்கும் நாம் செலுத்துகிறோம். பரமாத்மா என்பது எல்லாம். பிரச்சினை எப்படி எழுகிறது எனக் காண்போம். அடிப்படையில் தூய்மையாக பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். அது பகுதியின் முழுமை, கண்டமான அகண்டம். அது ஒருமை, ஐக்கியமன்று. அதன்படி பகுதியை விளக்கலாம், அவற்றின் வளர்ச்சியை விளக்கலாம். ஒருவர் மற்றவருடன் கொள்ளும் தொடர்பு பிரிவினை, வெறுப்பு, விருப்பு என்பவற்றாலானது.

நாம் முழுமையைக் காண்போம். மனிதப் பிரச்சினை, மனித முன்னேற்றமே நமக்கு முடிவன்று. நாம் தார்மீக உலகில் வாழவில்லை



என்று அறிவோம். தர்மம் மனிதன் ஏற்படுத்தியது. இயற்கையை நம் கண்ணோடு பார்க்கிறோம். நம்முடைய தர்ம நியாயப்படி இயற்கையைக் கணிப்பது தவறு, பிடிவாதமான அறிவீனம் என்கிறார் பகவான். அது குழப்பத்தை விரும்பி நாடுவதாகும். நமக்குப் பழக்கம் முக்கியம். நம் அனுபவப்படி இயற்கையை அறிய முயல்வது தவறு. மனிதச் சுபாவம் அவன் பிறப்பைப் பொருத்தது. அது எப்படி இயற்கைக்குப் பொருத்தம்? அது அவனுக்குச் சரியான கண்ணோட்டமாகாது. தன்னையறியவோ, ஞானம் பெறவோ அது உதவாது. அதிகபட்சம் அது அறிவுக்குத் தடையாக இருக்கும். ஜடமான பிரகிருதிக்குத் தர்மமில்லை. அதற்குரிய சட்டம் உண்டு. நம் பழக்கப்படி அது செயல்படும். அதற்கு நல்லது கெட்டதில்லை. சிருஷ்டிக்கும் சக்திகள் அதற்கு முக்கியம். வேறொரு சக்தி இவற்றை ஏற்பாடு செய்து, இருப்பதைக் காக்கிறது. அழிவுச் சக்திகளுண்டு. அழிவுக்குப் பாரபட்சமில்லை. அவற்றிற்குத் தர்மமோ, நியாயமோ இல்லை. அவற்றுள் உள்ள இரகஸ்யப்படி அவை நடக்கின்றன. அதற்குள்ள திருப்தி ஊமையின் திருப்தி. அப்படி அவை ரூபம் பெறுகின்றன, அல்லது அழிகின்றன. மிருகங்களுடைய சுபாவத்திற்கும் தர்மமில்லை. மனிதன் பரிணாமத்தால் எழவேண்டிய அஸ்திவாரம் அவர்களுடையது. அதனின்று எழும் உயர்ந்த விலங்கான மனிதனுக்கு தர்மமும், தர்ம உணர்வும் வளர்கின்றன. புலி மானைக் கொன்று தின்பது நமக்குத் தவறன்று. புயல் அழிப்பதையும் நாம் குறை கூறுவதில்லை. நெருப்பு எரிக்கிறது, வதைக்கிறது. அதையும் நாம் கண்டிப்பதில்லை. குறையே தர்மத்தின் ஆரம்பம். நம்மையே நாம் கண்டிப்பதும், குறை கூறுவதும் அது போன்றதே. பிறரைக் குறை கூறுகிறோம். அதே சட்டப்படி நாம் நடப்பதில்லை. இது உண்மையான தர்மமில்லை. சில விஷயங்கள் நம்மைப் பாதிக்கின்றன. அது நமக்குப் பிடிக்கவில்லை. அதனினின்று நாம் விலகுகிறோம். இது நம் தர்மம். இவையனைத்தும் நம் உணர்ச்சி வயப்பட்டவை.

விருப்பு, வெறுப்பே தர்மத்தின் ஆரம்பம். வெறுப்பால் ஒதுங்குவது தர்மமாகாது. மான் புலிக்கு அஞ்சுகிறது. வலிமை மிகுந்த புலி எளிய மான் மீது பாய்கிறது. தனிப்பட்ட வாழ்வின் ஆனந்தத்திற்கு இது ஆபத்து. எனவே மான் பயந்து ஒடுங்குகிறது. மனம் வளரும்பொழுது பயம் மென்மையாகி வெறுப்பாகிறது. அதனால் மறுத்து ஒதுங்குகிறது. ஆபத்தால் நாம் மறுப்பதன்மீது வெறுப்பு எழும். மற்றவை நமக்கு திருப்தி தரும். நாம் அவற்றை ஏற்கிறோம். இவ்வுணர்ச்சிகள் மனதில் நன்மை, தீமையாக உருவாகின்றன. இவை சமூகத்திற்கோ, தனி மனிதனுக்கோ நல்லது. இதிலிருந்து பிறந்ததே தர்மம், நியாயம், நன்மை, தீமை. நாம் இவற்றைக் கொண்டு பிறரைக் கணிக்கிறோம். நமக்கு இவற்றைப் பயன்படுத்துவதில்லை. ஆனால் எங்கும், எப்பொழுதும் அடிப்படையான சுபாவம் மாறுவதில்லை. மனிதனுக்குத் தன்னை வெளிப்படுத்த வேண்டும். தான் வளரவேண்டும். சித்-சக்தி அவனுள் இருக்கிறது. அது அவனுக்குத் திருப்தி தரும் செயல். அது முன்னேற்றம். **அதுவே மனிதனுக்கு அடிப்படையான ஆனந்தம்**. எது அவன் வளர்ச்சிக்குத் தடை செய்கிறதோ, தன்னை வெளிப்படுத்துவதற்குத் தடையாக இருக்கிறதோ, தன் திருப்திக்கும், முன்னேற்றத்திற்கும் ஊறு செய்கிறதோ, அது அவனுக்குத் தீமை. எது அவன் செயலை உயர்த்துகிறதோ, உறுதிப்படுத்துகிறதோ, வலுப்படுத்துகிறதோ, உன்னதமாக்குகிறதோ, அது அவனுக்கு நன்மை. முன்னேற்றம் என்பது மாறிக்கொண்டேயிருக்கும் பரந்த இலட்சியமாகும். ஒரு கட்டத்தில் அவனைக் கடந்து செல்லும். அது பிறரையும் தழுவும். முடிவில் அனைத்தையும் தன்னுட்கொள்ளும்.

தர்மம் என்பது பரிணாமத்தின் பல நிலைகளில் ஒன்று. மூன்று நிலைகட்கும் பொதுவானதுண்டு. சச்சிதானந்தம் உலகில் தன்னை வெளிப்படுத்துவது மூன்று நிலைகட்கும் பொது. முதல் நிலையில் இந்த சக்திக்குத் தர்மம் பொருட்டன்று. விலங்கு தர்மத்திற்குக் கீழ்ப்பட்டது. அறிவுள்ள மிருகம் அதர்மமானது. பிறருக்குச் செய்யும் கொடுமை சரி, நமக்குக் கூடாது என்பது அதன் நியாயம். இப்படிப் பார்த்தால் மனிதன் பாதிதான் தர்மத்திற்குக் கட்டுப்பட்டவன். நமக்குக் கீழுள்ளவை தர்மத்திற்கும் கீழானவை. நாளாவட்டத்தில் நாம் உயரமுடியும். அப்பொழுது நாம் தர்மத்தைக் கடந்தவராவோம். அங்கு தர்மம் தேவையில்லை. மனித குலத்திற்கு தர்மம் தலைகாக்கும் என்பது இலட்சியம். மனித குலம் சுமுகமானது, பரந்த நோக்கமுடையது. இது ஜடமான தாழ்ந்த சுமுகம். இந்தச் சுமுகம் சிறு துண்டுகளாக வாழ்வால் சிதறடிக்கப்பட்டுள்ளது. சிதறடிக்கப் பட்டவை பெரிய சுமுகத்தை உண்டு பண்ணும். அது பிரபஞ்சம் முழுவதும் பரவும். அது வாழ்வில் ஆத்மா புதைந்துள்ளதை அறிவதால் ஏற்படுவது. அங்கு வந்தபின் தர்மம் தேவையில்லை. அங்கு தர்மம் செயல்படமுடியாது. தர்மம் செயல்பட மனித குணம் தேவை. நாம் இதன்படி முடிவான சுமுகத்தை எய்திவிட்டோம். இங்கு மனித குணமும், முரண்பாடும் கரையும்.

தர்மம் 3 நிலைகளில் ஒன்றுக்கே உரியது. அது தற்காலிகமானது. நமக்கு அது முக்கியம். தர்மத்தின் மூலம் தர்மத்திற்குக் கீழிருந்து தர்மத்திற்கு மேலே போகிறோம். இது பகுதியின் சட்டம் என்பதால், முழுமைக்கு இது பொருந்தாது. இதை முடிவின் ஒரு பகுதியாகக் கொள்ளலாம். நம் கண்ணோட்டம் தற்காலிகமானது, அரைகுறையானது. நம் அரைகுறை அறிவுக்குப் பின்னால், பிரபஞ்சம் முழுவதும் உண்டு. பரிணாமம் முழுவதும் இதன் பின்னணியில் உள்ளது. நமக்கெட்டாதது, உலகம் 3 நிலையாகப் பிரிகிறது. தர்மமும், அதற்குக் கீழ்ப்பட்டதும், மேம்பட்டதுமாகும் அவை. மூன்றிற்கும் பொதுவானதைக் காண்போம். அதுவே பிரச்சினையைத் தீர்க்கும்.

சித் சக்தி, ஆத்ம சக்தி, ஜீவ சக்தியாகும். அது ரூபம் பெற்றுயர்கிறது. இந்த மாற்றம் அதற்கு ஆனந்த அனுபவம். அதுவே அதற்குத் திருப்தி. இந்த திருப்தியில் எழும் ஆனந்தம் ஆரம்பம். இவ்வானந்தம் சத்தினுடைய ஆனந்தம். இது இதற்கு இயல்பானது. சித் சக்தி இதைப் பற்றிக்கொண்டு இந்த ஆனந்தத்தை அஸ்திவாரமாகக் கொள்கிறது. ஆனால் இதற்கே புது ரூபங்களைத் தேடுகிறது. புதிய ரூபங்கள் எழும் பாதை துன்பமும் வலியும் நிறைந்தது. அவை அடிப்படையான ஆனந்தத்திற்கு எதிரானவை. இதுவே பிரச்சினைக்கு வேர், மூலம்.

இதை எப்படித் தீர்க்கலாம்? சச்சிதானந்தமே ஆதியும், முடிவுமில்லாதது எனலாம். சூன்யம், அசத், நிர்வாணமே முதல் ஆரம்பம் எனக் கூறலாம். சூன்யம் பாரபட்சமற்றது. எல்லாவற்றையும் தன்னுட்கொண்டது. ஜீவியமும், ஜீவனற்றதும், ஆனந்தமும், அதற்கெதிரானதும் சூன்யத்துள் உள்ளன. எல்லாவற்றையும் விளக்க முயன்றாலும், எதையும் விளக்க முடியாது. நாம் அனைத்தையும் பட்டியலாக்கியுள்ளோம். நாம் சூன்யத்தில் முடிகிறோம். இந்த சூன்யத்துள் எல்லாமிருப்பதாகக் கூறுகிறோம். இது முற்றிலும் முரண்பாடான நிலை. வலி, ஆனந்தமென்ற சிறிய முரண்பாட்டில் ஆரம்பித்து சூன்யத்தில் எல்லாமிருப்பதாகக் கூறும் பெரிய முரண்பாட்டிற்கு வந்துவிட்டோம். அசத் என்பது சூன்யம். அதற்குள் எதுவுமில்லை. வித்தாகவுமிருக்க முடியாது. சூன்யம் பாரபட்சமானது எனில், அதனால் சிருஷ்டிக்க முடியாது என்றால், எல்லாத் திறமைகளும் அதனுள்ளிருக்கின்றன எனில் அது பெருங்குழப்பம். அதாவது சூன்யத்துள் குழப்பமிருக்கிறது என்றாகிறது. எப்படி என நாம் கூறவில்லை. சச்சிதானந்தத்திற்குத் திரும்ப வருவோம். முடிவான தீர்வைத் தேடுவோம்.

நாம் பிரபஞ்சத்தை ஏற்கிறோம். அது மனித ஜீவியத்திலிருந்து மாறுபட்டது. நம் மனத்தைவிடப் பரந்தது. மனித ஜீவியத்தைவிட



உயர்ந்த சாரம் உள்ளது. அதேபோல் பிரபஞ்ச ஆனந்தம் நம் சுக துக்கங்களினின்று மாறுபட்டது. பிரபஞ்ச ஆனந்தம் மனித சுக துக்கங்களைவிட மிகச் சாரமானது, அகன்றது என்பதை நினைவிலிருத்தவேண்டும். நம் வாழ்வில் சந்தோஷம், ஆனந்தம், மகிழ்ச்சி எப்பொழுதோ வருகிறது. அவை அடிப்படையான வாழ்வின் ஆனந்தத்திலிருந்து பிரிந்து நிற்கின்றது. ஆனந்தம் அளவற்றது, பிரபஞ்சம் முழுவதும் பரவியது. அது சுயமானது. அது மற்ற சந்தர்ப்பங்கள், காரணங்களைப் பற்றியதில்லை. அதுவே அதன் அடிப்படை. சுகமும், துக்கமும் இப்பின்னணிக்குரியவை. புருஷனின் ஆனந்தம், பிரகிருதியின் ஆனந்தமாகிறது. சக்தியின் சலனத்திற்குரியது இம்மாற்றம். அதன் ரூபங்கள் பல. சுகம் நமக்குரிய ரூபம். வலி நமக்குப் பிடிக்காத ரூபம். இவ்வானந்தம் ஜடத்தின் ஆழ்மனத்திற்குரியது. இதுவே மேலே பரமாத்மாவாகும். இவ்வானந்தம் மனம், வாழ்வு, ஜடம் மூலம் வெளிப்பட முயல்கிறது. சக்தியில் சலனம் வேகப்பட்டால், நாம் நம்மை அதிகமாக அறிகிறோம். அங்கு இவ்வானந்தம் தன்னைச் சித்திக்க முயல்கிறது. இதன் முதல் ரூபம் எதிரான இரட்டைகள், தூய்மையற்றது. அது சுகம், துக்கம் என்ற இரு முனைகளினிடையே செயல்படுகிறது. அதன் இலட்சியம் தூய்மை, சுய ஆனந்தம், சுயம்பிரகாசம். அப்படிப்பட்ட ஆனந்தம் சுயமானது. அது மற்றவற்றைப் பொருத்ததன்று. எந்தக் காரணத்தையும் பொருத்ததன்று. சச்சிதானந்தம் பிரபஞ்ச வாழ்வைத் தனி மனித வாழ்வாக்குகிறது. ஆத்மா ரூபத்தைக் கடந்தது. அது உடலுக்குரிய ரூபம், மனதிற்குரிய ரூபத்தை நாடுகிறது. இந்த மாற்றத்தின்போது, பிரபஞ்சத்திற்குரிய, சுயமான, அகத்திற்குரிய ஆனந்தம், புறத்திற்குரிய ஆனந்தமாக குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் வெளிப்படுகிறது. பின்னணியிலிருப்பதை நாம் காண்பதில்லை. எதிரில் பொருள்களைக் காண்கிறோம். எனவே நாம் அப்பொருள்களை நாடுகிறோம். நம் சிற்றின்ப திருப்திக்காக அவற்றை நாடுகிறோம். நாம் சுதந்திரமானவர்கள். நாம் ஆத்மாவைப் பெற்றுள்ளோம். நாம் அதைத்

தேடவேண்டிய அவசியமில்லை. நாம் அதை ஏற்கனவே பெற்றுள்ளோம். இப்பொருள்கள் ஆனந்தத்தைப் பிரதிபலிக்கின்றன. அவை ஆனந்தத்திற்குரிய காரணமில்லை. இவ்வானந்தம் என்றும் உள்ளது.

மனிதன் அகந்தை, ஜடமான ஓட்டிலிருந்து அவன் வெளிவருகிறான். வாழ்வின் ஆனந்தம் அவனுக்கு சப்பென இருக்கும். அது தெளிவற்றது. அது ஆழ்மனச்சாரலிலுள்ளது. அது மறைவிலுள்ள வளமான பூமி. அங்கு ஏராளமான களை முளைத்துள்ளது. அதன் புஷ்பம் விஷமானது. வலி, இன்பம் எனப்படுபவை அவை. நம் அகந்தையின் பயிர் அவை. ஆத்மா நம் வாழ்வில் நம்மை அறியாமல் செயல்படுகிறது. அது இவ்விஷ விருட்சத்தை ஜீரணம் செய்யும். இவை பூமியின் செல்வம். தெய்வம் இவற்றை எரிக்கும் என ரிக் வேதம் கூறுகிறது. அவையனைத்தும் இன்ப துன்ப வேராகும். இவற்றின் காரணமே அவைதான். அதன் இரகஸ்யமும் அதுவே. அதன் ஆனந்த சாரம் அவற்றிலுள்ளது. அவை புது ரூபமாக எழும். அது ஆசையாக இருக்காது. அது சுயமான திருப்தியாகும். நம் இன்பம் மனிதனுக்குரியது. இறைவனுக்குரியது அழியாத பூரிப்பு. அது மனிதனை விலக்கிச் செயல்படும். இத்திருவுருமாற்றம் நிச்சயம். உணர்ச்சி இவற்றிலிருந்து எழும். அடிப்படையில் அவை ஜீவனின் ஆனந்தம். வலியின் ஆதி ஆனந்தம். இன்பமும் ஆனந்தத்திலிருந்து வருகிறது. அவை ஆனந்தத்தை வெளிப்படுத்த முயன்று தோல்வியுற்றன. அறியாமை, அகந்தை, கண்டம் தோல்விக்குக் காரணம்.

☆ ☆ ☆



## எங்கள் குடும்பம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கணவன் : உனக்கு மட்டும்தானா குடும்பம். எனக்கில்லையா? உனக்குள்ள பக்தி எனக்குத் தெரியும். நீ எதைச் செய்தாலும் நான் தடுக்கமாட்டேன்.

மனைவி : தடுக்காதது சரி. வருவது, கூடி வரும்வரை பொறுமையாக இருக்கவேண்டாமா?

கணவன் : என்னால் இதுவரை அப்படிக் கெட்டுப் போனதுண்டா?

மனைவி : பெரியவனைப் பெரிய தொழிலில் பார்ட்னராக எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு பலித்திருந்தால், இன்று எங்கிருப்போம்?

கணவன் : சென்னையில் பெரிய செல்வர் வரிசையிலிருப்போம். அது என்னால் தவறிவிட்டதா?

மனைவி : தவறியது உண்மை. தவறியதை நம்மால் தடுக்க முடியவில்லையே.

இதைப் பேசும்பொழுது மனைவிக்கு அந்த நேரம் தான் தன் தம்பியிடம் அவ்விஷயத்தைச் சொல்லியது நினைவுக்கு வந்தது. தம்பி நல்லவன். அவனிடம் சொன்னதால் விஷயம் கெட்டுப்போகாது. **பெரிய விஷயம் வந்தவுடன் தமக்குச் சொல்லத் துடித்தது நினைவுக்கு வந்தது. அப்படி மனம் அவசரப்பட்டால் விஷயம் கெட்டுப்போகும் என்று தெரியும்**. தன்னைமீறிச் சொல்லியதால்தான் கெட்டுப் போயிற்று என்று தெரியும். அது தம் பங்கு. தொழிலை விஜயவாடாவில் ஆரம்பிக்க வேண்டும் என்றபொழுது சென்னையில் இல்லாவிட்டால் வேண்டாம் எனக் கணவர் கூறி காரியத்தைக் கெடுத்தார்.

கணவன் : அன்னையால் வருகிறது. வருவது கூடி வருவதில்லை. என்ன செய்வது?

மனைவி : வரும் அதிர்ஷ்டத்திற்கு வரவேற்பு தரும் மனநிலை வீட்டிலில்லை.

கணவன் : என் மீது என்ன தவறு? சென்னையில் வேண்டும் என்று கேட்டது தவறா?

மனைவி : அப்படி நினைத்தாலே கெட்டுவிடும், கேட்கலாமா?

கணவன் : சரி அடுத்த முறை அப்படி நான் கேட்கவில்லை. நினைக்கக்கூடாது என என்னால் மனத்தைக் கட்டுப்படுத்த முடியுமா?

கணவர் மனம் கேட்டுக்கொள்ளும் நிலையிலில்லை என்பதால் பேச்சை அவள் தொடரவில்லை. தம்மைத் தவிர எவரும் அன்னையைச் சரிவர அறியாதபொழுது இதுவரை வந்த வாய்ப்புகள் தங்கள் குடும்பத்தை 15ஆம் நிலையினின்று 80ஆம் நிலைக்குக் கொண்டு போயிருக்கும். குழந்தைகள் விளையாட்டுத்தனமாக இருக்கிறார்கள். கணவனுக்குப் புரியவில்லை. ஒரு நேரம் கிண்டலாகப் பேசுகிறார். அடுத்த நேரம் பொருத்தமாகப் பேசுகிறார். இந்தச் சூழல் வாய்ப்பைப் பெறாது. அப்படியானால் சரியான சூழலை தாம் கொண்டு வரமுடியுமா? முடியும் என்றால் அந்த முயற்சியை எடுப்பது சரியா? முயற்சியே எடுக்காவிட்டால், எதுவுமில்லாமல் போய்விடுமே. முயற்சி எடுத்தால் பலன் தாராது. அது புரியவே முயற்சி எடுக்கலாம் என்பது புரிந்தது. மனம் இக்கட்டத்தில் போராடியது. தமக்கு மனம் இந்தக் கட்டத்தில் அடங்கும்வரை எவரையும் நொந்துகொள்வதில் பலனில்லை என நினைத்தவுடன் கணவன் மீண்டும் வந்தார். பொருத்தமாகப் பேசினார். ஆதரவாகப் பேசினார். தம் மனம் அடங்குவதால் இவர் இப்படிப் பேசுவதாக மனைவி நினைத்தார்.



**எது நடந்தாலும் என்னால் மட்டும் நடக்கும், பிறர் ஒத்துழைக்கவும் என் மனநிலையே காரணம் என்று தோன்றுகிறதே என நினைத்தார்**. உண்மை எது என அறியப் பிரியப்பட்டார். முதல் எண்ணம் ஏற்பட்டவுடன் சமர்ப்பணம் செய்ய முடிந்திருந்தால், இத்தனைப் பிரச்சினையில்லை என்று தெளிவாயிற்று. சற்று நேரம் கழித்து தனக்கு மனம் அடங்கி, முதல் எண்ணம் சமர்ப்பணமானால், அனைவரும் ஒத்துழைப்பார்கள் என்று புரிந்தது. இத்தனை நாளாக அந்தச் சமர்ப்பணம் பிடிபடவில்லை, இன்று நினைவும் வரவில்லை. நமக்குச் சமர்ப்பணமும் நினைவு வாராத காலத்தில் இவ்வளவு பெரிய வாய்ப்பை அன்னை அளிப்பதை உணர்ந்தார். நன்றி எழவில்லை என்பதைக் கண்டார். மனம் வறண்டிருந்தது. எவ்வளவு நல்லவை நடந்தாலும், அவை முழுப்பலன் தர உடல் நன்றியால் பூரிக்கவேண்டும் என்பதை அவர் அறிவார். அது அவருக்கு மனக்குறை.

கொஞ்ச நாள் கழித்து ஒரு நாள் கணவன் மிகவும் கனிவுடன் பழகுவதையும் அன்னையைப் பற்றிய சிந்தனை அவர் மனத்தை ஆட்கொண்டிருப்பதையும் கண்ட மனைவி சந்தோஷப்படுவதற்குப் பதிலாக முதற்காரியமாக அவ்வெண்ணத்தைச் சமர்ப்பணம் செய்ய விரும்பினார். மனம் சந்தோஷத்தை நாடுகிறது. சமர்ப்பணம் எண்ணமாக இருக்கிறதே தவிர செயலாகப் பூர்த்தியாகவில்லை. கணவன் தனிமையில் மனைவியிடம் வந்து பேசினார்.

கணவன் : கொஞ்ச நாளாக நீ சொல்லியது என் மனத்திலிருக்கிறது. மேற்கொண்டு நாமனைவரும் சேர்ந்து செய்யக்கூடியதுண்டா என நான் கேட்க விரும்புகிறேன்.

இது மனைவி வாழ்வில் பெரிய மாறுதல், புரட்சி எனவும் கூறலாம். ஆனால் எண்ணம் சமர்ப்பணமாகாதவரை என்ன செய்வது என்று தெரியவில்லை. மேலும் பிள்ளைகளோ, கணவனோ அன்னை

எழுதிய எதையும் படித்தவரில்லை. அவர்களிடம் எந்த disciplineஐப் பற்றிப் பேச முடியும் என்று தயங்கியபொழுது, போன் மணியடித்தது. கணவர் பேசினார். பெரியவனை பார்ட்னராக எடுத்துக்கொள்ளப் பிரியப்பட்டவர் வருகிறார் என்பது செய்தி. **இது முடியும்வரை சமர்ப்பணமே முக்கியம் என்று மனைவி நினைத்தார். ஆனால் சமர்ப்பணம் செய்ய முடியவில்லை**. கணவனுக்கு அன்னையைப் புரிகிறது. நடந்தது பெரியது என்ற சந்தோஷம். போனில் பேசியவர் வந்தார். கணவன் மனைவியை தொழில் விஷயமாகக் கலந்தார். முதல்முறை ஏன் தவறியது என்று கூறினார். இம்முறை உடனே அதை முடிக்கவேண்டும் என்று பேசினார். அன்று மாலை கணவர் பிள்ளைகளுடன் வந்து மனைவியிடம் தம் மனத்தைத் திறந்து பேசினார்.

கணவன் *:* நான் அன்னையை அறியவில்லை. அறியவேண்டும் என்று நினைத்தபொழுது இவ்வளவு பெரிய காரியம் நடந்துள்ளது. நாம் அனைவரும் இனி அன்னை சட்டப்படி செயல்படவேண்டும்.

பெரியவன்*:* அன்னை சட்டம் என்றால் அம்மா சொல்படி நடக்கவேண்டும் என்பதுதானே*?*

மகன் அப்படிப் பேசுவது வேலையைக் கெடுக்கும். அவனை அப்படிப் பேசக் கூடாது என்று தாம் சொல்லக்கூடாது. அவன் சொற்களைச் சமர்ப்பணம் செய்யவேண்டும் என்று முயன்றபொழுது அவை சமர்ப்பணமாயின. கணவன் மகனைக் கடிந்துகொண்டார். முதன்முறை ஓர் எண்ணம் சமர்ப்பணமானது தாயாருக்கு அபரிமிதமான சந்தோஷம். **அதனால் காரியம் முடியும் என்பது எதிர்பார்ப்பு அல்லவா? என்ற நினைவு மனத்தில் எழுந்தது**. வீட்டின் சூழல் மாறிவருகிறது. ஒரு நாள் தாயாரும் பெண்ணும் பேசினர்.



பெண் அன்னையைப் பற்றி அறிய விரும்பினாள். அன்னையை தம்மைப்போல் ஏற்க மகள் விரும்புகிறாள் என்றறிந்து தாயார் மிகவும் மகிழ்ந்தாள். பெண்ணுடன் பிள்ளைகளும் சேர்ந்துகொண்டு தங்களுக்குத் தெரிந்த குடும்பங்களில் அன்னை செயல்பட்டதை ஆராய்ச்சி செய்ய விரும்பினர். பெரியவனால் கேலியாகப் பேசாமலிருக்க முடியாது. அது அவன் காரியத்திற்குத் தடை என்பதை நினைத்த தாயார் அக்குணம் அவனுக்குத் தன்னிடமிருந்து வந்திருக்குமா, தகப்பனாரிடமிருந்து வந்திருக்குமா என யோசனை செய்து, தம் குணமானால் அதைத் தாமே திருத்திக்கொள்ள வேண்டும் என்று நினைத்தார். நினைவை முடிவாக மாற்ற முயன்றார். மறுநாள் தியானத்தில் அதைச் செய்யலாம் என்று தள்ளிப்போட்டார். உடனே பெரியவன் தாயாரிடம் தன் குணத்தைப் பற்றிப் பேசினான். தான் தம்பியைப் பற்றி அன்று கேலியாகப் பேசியிருக்கக் கூடாது என்றான். அவனைப் பொருத்தவரை இது யுகப் புரட்சி, வெறும் புரட்சியில்லை. வந்துள்ள சந்தர்ப்பத்தை எப்படியாவது நல்லபடியாக முடிக்கவேண்டும் என்று தாயார் சிந்தனையிலாழ்ந்து பிள்ளைகள் பேசுவதைக் காதில் வாங்காமலிருந்தபொழுது, சிறியவன் சரணாகதி என்றால் என்ன என்று கேட்டான். தாயாருக்குத் தாம் காரியத்தை முடிக்க வேண்டுமா, காரியத்தைச் சரணம் செய்யவேண்டுமா என்ற கேள்வி எழுந்தது.

தாயார் *:* ஒரு காரியத்தை நாம் பொறுப்பாகத் திறமையாகச் செய்வதைவிட, நாம் நம் திறமையை நம்பாமல், அன்னையை மட்டும் நம்பி திறமையை முழுவதும் செயல்படச் செய்தால், முடிவான பலன் முதலிலேயே கிடைப்பது சரணாகதி.

சிறியவன் *:* என்னை, பள்ளி teamஇல் சேர்க்கவில்லை. நான் என்ன செய்வது*?*

பெண் : இது தோல்வியில்லை. அருள் என எடுத்துக்கொள்வது சரணாகதியாகுமா!

பெரியவன்: இது இல்லை என்றால், பெரியது வரும் என நினைப்பது சரணாகதியில்லையா?

தாயார் : இரண்டும் சரணாகதி போன்றவையே. ஆனால் சரணாகதி இவையிரண்டையும் கடந்தது.

பெரியவன்: எப்படி?

தாயார் : காரியம் கூடிவர நீங்கள் இருவரும் கூறிய மனநிலை போதும். சரணாகதி என்பது காரியத்தை மறந்து அன்னையை நினைப்பது.

பெரியவன்: அன்னையை நினைத்தால் என்ன வரும்?

பெண் : அன்னை வருவார்.

சிறியவன் : எனக்கு teamஇல் இடம் வேண்டும். அன்னை வேண்டாம்.

அப்பொழுது மாமா வந்தார். ஆக்ரா போவதைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். சிறியவனைப் பற்றி ஒரு பிரின்சிபாலிடம் பேசியதாகவும், நன்றாக வாலிபால் விளையாடுவான் எனவும் கூறினார். அவர் ஒரு பிரபலமான கல்லூரியின் பிரின்சிபால். தம் கல்லூரியில் பையனைச் சேர்த்தால் college teamஇல் அவனை எடுத்துக்கொள்வதாகக் கூறினாராம். அது பிரபலமான கல்லூரி. அம்மாணவர்கள் வடநாட்டில் எல்லாம் போய் ஜெயித்து வந்திருக்கின்றனர். சரணாகதியை நினைப்பதன் பலன் இது. பிள்ளைகள் வாயால் மறுத்துப் பேசும்பொழுதும், அதை மீறிப் பலன் வருகிறது என்பதை தாயார் கருத்தாகக் கருதினார். **அப்படியிருந்தும் சரணாகதியை முதலாகவும், முடிவாகவும் ஏற்கவேண்டும் என்று தோன்றவில்லை**. எப்படிச் சிறியவன் சந்தோஷப்படுவான், பெரியவனுக்கு வந்துள்ள பேரதிர்ஷ்டம் எப்படிக் கூடிவரும் என்பதையே மனம் தாயாருக்குக் கருதுகிறது. சரணாகதிக்கோ, சமர்ப்பணத்திற்கோ அவர் மனத்தில் இடமில்லை. தொழில் (industries) சந்தர்ப்பம் பலித்தது பெரிய விஷயம். இதை நல்லபடியாக முடிக்கவேண்டும் என்ற கவலை தாயார், தகப்பனார் மனத்தை ஆட்கொண்டது. அங்குப் பிரச்சினையில்லை. காரியங்கள் சிறப்பாக நடக்கின்றன. நாம் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. எல்லாம் மற்றவர் முயற்சி. பலனைப் பெறுவதே நம் பங்கு என்பது அங்குள்ள நிலை. வீட்டு நிலை அடியோடு மாறிவிட்டது. குடும்பம் இனி உயர்ந்துவிடும். நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்துவிடும். தமக்குச் சரணாகதி பலிப்பதன் முன் இவ்வளவு பெரிய உயர்வு வருகிறது. ஆனால் குடும்பத்தாரை அன்னையை ஏற்கவைப்பது இதைவிடக் கடினமானது எனத் தாயார் உணர்கிறார்.

☆ ☆ ☆

ஒரு நாள் வீட்டில் அனைவரும் சேர்ந்து அன்னையைப் பற்றியும் அவர்கள் அறிந்த அன்னை வெளிப்பாடுகளைப் பற்றியும் பேசினர்.

கணவர் : அன்னை சக்தி வாய்ந்த தெய்வம். நாமெப்படி அதைப் பெறுவது எனத் தெரியவில்லை.

பெண் : ஏன் தெய்வம் என்று கூறுகிறீர்கள் அப்பா? அன்னை தெய்வங்களுக்கும் மேற்பட்டவரல்லவா?

சிறியவன் : நமக்கு எல்லாம் ஒன்றுதானே.

பெரியவன்: நமக்கு ரூபாய்தான் தெய்வம்.

தாயார் : அந்த ரூபாயை அன்னை சட்டப்படிச் சம்பாதிப்பது எளிதன்று.

பெரியவன்: அப்படி வந்தால் அதிகமாக வருமா?

கணவன் : அதிகமாக வரும் என்று தெரிகிறது. வந்தபிறகு நிலைக்கமாட்டேன் என்கிறது.

தாயார் : **கொடுப்பது அன்னை, பெறுவது நாமல்லவா?**

கணவன் : வந்தது நிலைக்கவில்லை எனில் என்ன புண்ணியம்?

பெண் : அட்மிஷன் வாங்கிக் கொடுத்தபின் படிக்கும் பொறுப்பு பையனுடையதல்லவா? படிக்காமல் வீட்டிற்கு வந்து விட்டால் என்ன செய்யலாம்?

பெரியவன்: அகந்தை போனபிறகு சம்பாதித்தால் அழியாது.

சிறியவன் : அகந்தை போகப் போவதில்லை. சம்பாதிக்க முடியாது என்றாகும்.

கணவர் : அன்னை எதை அகந்தை என்கிறார்?

சிறியவன் : எனக்குத் தெரியும். கர்வம், திமிர், சுயநலம்.

கணவர் : நாமெல்லாம் அப்படியா இருக்கிறோம்.

பெண் : அம்மாதான் சொல்லணும்.

தாயார் : பரநலமாக இல்லாததெல்லாம் சுயநலம்.

பெரியவன்: எனக்கு பேக்டரி வந்துவிட்டது. அங்கு எப்படிப் பரநலமாக இருப்பது?

பெண் : பாக்டரி உனக்கில்லை, வீட்டிற்கு.



சிறியவன் : அதுதான் சுயநலம்.

பெரியவன்: என் பேரில் இருப்பதால் நான் எனக்கு என்றேன். நான் சுயநலமாக நினைக்கவில்லை.

சிறியவன் : பணம் வந்தால், சுயநலம் கூடவே வரும்.

தாயார் : அதெல்லாமிருக்கட்டும். பாக்டரி நாம் கேட்காமல் அடுத்தவர் பரநலத்தால் வருவதைக் கருதி அதன்படி நடந்தால் நீடிக்கும்.

கணவர் : சரி, எனக்கு இப்பொழுது புரிகிறது. இன்று அடக்கமாக இருக்கலாம். பாக்டரி பெரியதானால், மனம் அடங்காது.

தாயார் : மனம் அடங்குவது, உடல் வணங்குவது அவசியம்.

பெண் : அதெல்லாம் நம்மால் முடியுமா?

தாயார் : அன்னையை முன்னே வைத்தால் முடியும்.

கணவர் : இது பெரிய காரியம். இப்போ, புரியுது. நீ நாமெல்லாம் பேசுவது சரியில்லை என்றாயே, அது என்ன?

தாயார் : நம் வீட்டில் மனத்தில் தோன்றுவதைப் பேசுகிறோம். அது பிறர் மனத்தைப் புண்படுத்தும். கேலியாகப் பேசுகிறோம், அது காரியத்தைக் கெடுக்கும்.

கணவர் : இது மட்டமான குடும்பம் என்பது உன் முடிவா?

தாயார் : நாம் பேசுவதை எல்லாம் யோசனை செய்து பார்த்தால் நமக்கே சரி என்று படுமா?

கணவர் : எப்படி இனி பேசக் கற்றுக்கொள்வது?

தாயார் : யோசனை செய்தால் புரியும்.

பெண் : பேசக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது வேடிக்கை.

சிறியவன் : இதுதான் ரொம்ப நாளையப் பிரச்சினையாயிற்றே. அம்மா சொல்வது சரிதானே. பிறர் மனம் புண்படப் பேசி சிரிப்பது நமக்கு வழக்கம்தானே.

பெரியவன்: அப்படிப் பேசினால்தான் ருசியாக இருக்கிறது.

கணவர் : இப்போ பாக்டரி வந்துவிட்டது. அப்படிப் பேசினால் ஆபத்து.

பெரியவன்: எனக்கு அகண்ட மௌனம் பூணவேண்டும்.

கணவர் : பாக்டரி பெரிய விஷயம். கேலிக்கு இடமில்லை. எல்லோரும் அம்மா சொல்படி நடக்கணும்.

பெண் : இப்போ பாக்டரி வந்து பேச்சு கற்றுக்கொடுக்கிறது.

தாயார் : அதுவே அன்னை விசேஷம்.

பாக்டரிக்காகச் சரியாகப் பேசினால் பாக்டரி நிலைக்கும். அன்னைக்குரிய பண்பு என்பது பாக்டரியில்லாத பொழுதும் பண்போடு பழகக் கற்றுக்கொள்வது.

சிறியவன் : அம்மா, நடக்கறதைப் பேசணும்.

மறுத்துப் பேசினாலும், நாளடைவில் வீடு மாறியது. கேலியாகப் பேசுவது, குத்தலாகப் பேசுவது குறைந்தது. ஆனால் மனம் மாறவில்லை, மாற்றமும் நிலையாக இருப்பதில்லை. நேரம் வந்தால் சற்று அடக்கம் வரும். இல்லையென்றால் பழைய தொனி எழும். பாக்டரி விஷயம் நிலையாக முன்னேறி வருகிறது. ஏதோ ஒரு பெரிய



விஷயம் கூடிவருவதால் சக்தி முழுவதும் அதற்கே செலவாகிறது என்பதால் மற்ற விஷயங்கள் அப்படியே இருப்பதாகத் தாயார் நினைத்தார். இப்பொழுதுள்ள முக்கியப் பிரச்சினை: குடும்பம் மட்டமானது. மட்டமான நிலையில் அன்னை செயல்படுவது குறைவு. ஓரளவு மாற்றமிருந்தாலும், பண்பான குடும்பமாக மாற வேண்டும் என்ற நினைவேயில்லாத இடத்தில் எப்படி அந்த அவசரம் வரும்? நெடுநாள் சிந்தித்தபின் தம் மனநிலைக்கும் இதற்கும் தொடர்புண்டா? வேறு அம்சங்களுண்டா என யோசனை செய்தார் தாயார். குடும்ப நலனுக்காகத்தான் அன்னையை ஏற்றுக்கொண்டிருக்கிறாரே தவிர அன்னையை அன்னைக்காக, யோகத்திற்காகத் தாம் ஏற்கவில்லை. அதேபோல் குடும்பத்தில் அனைவரும் தங்கள் முன்னேற்றத்திற்காக - சௌகரியத்திற்காக - அன்னையை ஏற்றுக்கொண்டுள்ளனர். அது இப்படித்தானிருக்கும் எனத் தோன்றியது. அடுத்த முறை பேச்சு எழுந்தது.

கணவர் : உன் மனத்தில் பெரிய குறையிருப்பதாக நினைக்கிறேன்.

பெண் : நாமெல்லாம் அம்மாவைப் போலில்லை என்று அம்மாவுக்குக் குறை.

பெரியவன் : நாமெல்லாம் அம்மாவைப் போலிருக்கிறோம் என்பதே உண்மை.

பெண் : அம்மா தினமும் தியானம் செய்கிறார். நாமெல்லாம் செய்வதில்லை.

சிறியவன் : தியானம் பக்தியாகுமா? சுயநலம் என்று கூறக்கூடாதா?

கணவர் : அம்மா தியானம் உண்மை. இதைவிட அன்னைக்கு எப்படி உண்மையாக இருப்பது?

பெரியவன் : எதற்காக அம்மா அன்னையை வணங்குகிறார்? தம் காரியம் நிறைவேற.

பெண் : அம்மா அப்படியெல்லாம் சுயநலமில்லை.

சிறியவன் : அம்மாவின் சுயநலத்துள் குடும்பத்தின் பரநலம் உள்ளது.

பெரியவன் : என்ன சொல்கிறாய்?

சிறியவன் : அம்மாவுக்கு அன்னை தேவையில்லை. குடும்பம் முன்னுக்கு வரவேண்டும். அந்தஸ்து வேண்டும்.

பெரியவன் : பெரிய இடத்துச் சம்பந்தம் வேண்டும். நான் இதைத்தானே சொல்கிறேன். அம்மாவும், நாமும் ஒன்றே. அவரவர்க்கு அவரவர் விஷயம் முக்கியம்.

பெண் : இது தப்பு. அம்மாவுக்கு பக்தியுண்டு. நாமெல்லாம் வெறும் மனிதர்கள்.

கணவர் : நாம் அப்படிப் பேசக் கூடாது. அம்மாவுக்கு நம்மெல்லாரையும்விட பக்தியுண்டு.

பெரியவன் : பக்தியுண்டு. எதற்காக பக்தி? பெரிய இடத்துக் கல்யாணங்கட்குப் போய் வரவேண்டும்.

தாயார் : **என் மனம் சுயநலமாக இல்லாமல், உங்களுக்கு இப்படிப் பேசத் தோன்றாது. நான் சுயநலம் என ஏற்கிறேன்**.



அனைவரும் : அது சரியில்லை. நாங்கள் இப்படிப் பேசக் கூடாது.

பெரியவன் : உண்மையைச் சொல்லக் கூடாதா?

கணவர் : எது உண்மை, சொல்லலாமா? கூடாதா என அம்மாவையே கேட்போம். அன்னை எதை உண்மை என்கிறார்?

தாயார் : அன்னையை நோக்கிப் போவது உண்மை. மற்றதெல்லாம் பொய். என் மனத்தை நான் மேலும் சோதனை செய்யும் சந்தர்ப்பம் உங்கள் பேச்சு.

பெண் : அண்ணன் குதர்க்கமாகப் பேசுவதை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

தாயார் : என்னிடம் விஷயமில்லாமல் அவனுக்கு இப்பேச்சு எழாது என அன்னை கூறுகிறார்.

கணவர் : விதண்டாவாதம் பேசுவதை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டாம். புதிய நிலைமை வந்திருப்பதால், நம்மால் மேலும் என்ன செய்ய முடியும் என்று பார்ப்போம். நீதான் முக்கியம். நீயே மனம் உடைந்து பேசினால் அப்புறம் என்ன இருக்கும்?

கணவர் இதுபோல் மனம் மாறிப் பேசுவது பெரிய விஷயமானாலும், தாம் குடும்பத்திற்கு எதிர்பார்ப்பதை எட்டிப்பிடிக்க இதுவோ, இதுபோன்ற மற்ற எதுவோ போதாது என்று தாயார் அறிவார். அவருக்கு யோசனை பிறக்கவில்லை. சரணாகதி எட்டாக்கனி. இந்த அளவில் மனப் போராட்டம். டென்ஷன் அந்த ஆழத்தில். அது ஆழத்திலிருப்பதால் முகத்தில் தெரியாது. அன்னை எழுதியவற்றைப் பல முறை படித்ததுடன், ஆழ்ந்து பயின்றிருப்பதால்

இனிப் படிக்க வேண்டியது இல்லை. செய்யவேண்டியது இருக்கிறது. இதன் இரகஸ்யத்தின் சுருக்கம் எனத் தாயார் அறிவது முரண்பாடான கருத்துகள். அவை உடன்பாடாவது முக்கியம்.

1) பெற்ற பிள்ளையானாலும், ஓரளவுக்கு மேல் நாம் அவனுக்குச் செய்ய முடியாது. அன்னை கொடுப்பது அபரிமிதம். அது வர அவன் மனம் மாறவேண்டும்.

2) தாயார் மாறும் அளவுக்கு பிள்ளைகள் மாறுவார்கள். நாமே அவர்களை மாற்ற முயலக்கூடாது.

இம்முரண்பாடு சரணாகதியால் உடன்பாடாகும். அது சிரமம். அடிக்கடி கணவரும், பிள்ளைகளும் தாயாரிடம் மற்ற குடும்பங்களில் நடந்தவற்றைப் பற்றி அபிப்பிராயம் கேட்பதுண்டு. தாயார் விளக்கமாகப் பதில் கூறுவார். பதில் சொல்லப் பிரியப்பட்டாலும், அன்னையைப் பற்றிக் குடும்பத்தார் கேட்பது சந்தோஷமாக இருந்தாலும் தாயாருக்கு இதனாலெல்லாம் காரியம் நடக்காது எனத் தெரியும். தான் முதலில் அன்னையை ஏற்றுக் கொண்டபொழுதிருந்த அனுபவம் அவருக்கு நினைவிருக்கிறது. அது,

- **அன்னையை ஏற்றுக்கொள்வதால் நடக்கும் நல்லவை நம்ப முடியாதவை.**
- **நம் சுபாவம் மாறுமிடத்தில்தான் அன்னை தாம் அன்பருக்கு அளிப்பதை அளிக்க முடியும்.**

அந்த இடம் வரும்பொழுது கணவரும், பிள்ளைகளும் பிடிபடமாட்டார்கள். அப்பொழுது,

1) தாம் செய்த தவற்றை சரி எனப் பேசுவார்கள்.

2) அவசியமானால் பச்சையாகப் பொய் சொல்வார்கள்.

3) பிறருக்குத் தாம் செய்யும் கொடுமைகள் கண்ணில் படாது.



4) அந்த இடத்தில் "இந்த அன்னை எனக்கு வேண்டாம்" என்பார்கள்.

5) எவரிடம் மாதம் இருமுறை கார் கடன் வாங்குகிறார்களோ, அவருக்கு வருஷத்தில் ஒருமுறை மோட்டார் பைக் கொடுக்க மறுப்பார்கள். அது சரி எனப் பேசுவார்கள்.

6) எவரையும் தூக்கிவாரிப் போடும்படி துடுக்காகப் பேசிச் சிரிப்பார்கள்.

இவர்கள் தாமாக மாறுவார்களா? இப்பொழுது பெரிய இடம் வந்துவிட்டது, அதனால் மாறுவார்களா? நான் சமர்ப்பணத்தில் மாறியபின் அவர்களே மாறுவார்களா என்பது தாயார் மனம். கணவர் மனைவியுடன் தனியாகப் பேசுவதுண்டு. பிள்ளைகளும் தனித்தனியாக அம்மாவிடம் வந்து அன்னையைப் பற்றிப் பேசுவார்கள். சேர்ந்தும் பேசுவதுண்டு. தாயார் தம் மனத்துடன் கலந்துரையாடுவது அதிகம். விசேஷம் அங்குண்டு. மகள் தாயாரை அன்னையைப் பற்றிய விசேஷமான செய்திகளைச் சொல்லும்படிக் கேட்டாள்.

தாயார் : அன்னைக்குரிய சக்தியைப் பற்றி அறிய உனக்கு முதலில் வாழ்க்கையைப் பற்றித் தெரியவேண்டும். முதல் மார்க் வாங்கும் பையன் எப்படிப் படிப்பான், எப்படிப் பள்ளிக்கூடம் செல்வான் என்று தெரியும். படிக்கமாட்டேன், பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்ற பையன் பாஸ் செய்ய முடியுமா? அவனுக்கு முதல் மார்க் ஏது?

பெண் : நேரடியாகச் சொல்லுங்களேன்.

தாயார் : படிக்கமாட்டேன் என்ற பையன் பாஸ் செய்தால் அவன் பெரிய புத்திசாலியாகும். அவனே முதல் மார்க் வாங்குவது என்பதில்லை. வாங்கினால் அது உலக அதிசயம். அதை நடத்தும் சக்தி உலகிலில்லை.

பெண் : என்ன சொல்கிறீர்கள் எனப் புரியவில்லை.

தாயார் : அப்பாவுடன் வேலை செய்யும் முதலியாரைத் தெரியும் உனக்கு. அவர் மகள் உனக்கு வேண்டியவள். அவளுக்கு என்ன மாப்பிள்ளை வரும்?

பெண் : அவளுக்கு எதுவுமேயில்லை. அழகில்லை, குள்ளம், பணத்திற்கு வழியில்லை, சிடுமூஞ்சி. பணமும், குணமும் இல்லாதவளுக்குக் கிளார்க் மாப்பிள்ளை கிடைப்பதே கஷ்டம். அவளுக்கு வந்தது அமெரிக்கா மாப்பிள்ளையாச்சே. அது **Mother's Grace** என்று எனக்குத் தெரியும்.

தாயார் : இதுவரை எல்லோரும் அறிவார். என்ன நடந்தது என உனக்கு நினைவில்லையா?

பெண் : சரியாக விபரமாகத் தெரியாது. பெண் இந்த மாப்பிள்ளையை வேண்டாம் என்றாள், பிறகு சம்மதித்தாள் எனக் கேள்விப்பட்டேன்.

தாயார் : அதை விளக்கவே படிக்காத பையனுக்கு முதல் மார்க் தரும் சக்தி உலகிலில்லை என்றேன்.

பெண் : எனக்குத் தெரியாது.

தாயார் : முதலில் படிக்காத பையனுக்கு முதல் மார்க் தரும் சக்தி எப்படிப்பட்டது என்று யோசனை செய்.

பெண் : அதெல்லாம் நடக்காது.

*தொடரும்.......*

☆ ☆ ☆



**“Agenda”**

## Mother needs someone to unite the Ashram

**ஆசிரமத்தில் ஒற்றுமையுண்டுபண்ண அன்னைக்கு ஒருவரில்லை**

300 வீடுள்ள செட்டியார் வீட்டுப் பெண்ணை வாடகை வீட்டில் குடியிருப்பவருக்குச் சொந்தம் கருதி கொடுத்தனர். வீடு வாடகை வீடானாலும், அண்ணன் தம்பி ஐந்து பேரும் ஒற்றுமையாக இருந்தனர்.

***10 வருஷத்தில் ஒற்றுமை குடும்பத்தை உயர்த்தியது.***

***20 வருஷத்தில் ஊரில் பெரிய பணக்காரர் என்ற பெயர் எடுத்தது.***

***ஒற்றுமையின் உயர்வை அறியாதவரில்லை.***

ஒற்றுமையை அதிகாரத்தால் ஏற்படுத்தலாம். ஹிட்லர் நாட்டை அப்படி ஒற்றுமைப்படுத்தினான். **அதிகாரத்தால் ஏற்படும் ஒற்றுமையும், ஒற்றுமை என்பதால் சாதிக்கும். அதிகாரம் என்பதால் சாதித்தபின் அழியும்**. திருடர்கள் கூட்டமாக இருப்பார்கள். கூட்டம் ஒற்றுமையாய், உண்மையாக இருக்கும். திருடர்களுடைய ஒற்றுமையும் சாதிக்கும். பெரிய அளவில் சாதிக்கும்.

- **சத்தியஜீவியத்தின் அடிப்படை ஒற்றுமை.**
- **பிணக்கு** (vital) **உணர்வுக்குரியது.**
- **மனத்திற்குரியது விட்டுக்கொடுப்பது** (compromise)**.**

ஆசிரமத்தில் 2000 பேரும் 40, 50 சிறு கூட்டங்களாக மாறி போட்டியில் இறங்கியதால் சத்தியஜீவிய சக்தி பயன்படாமல், vital

உணர்வுக்குரிய போட்டியாகவும், சண்டையாகவும் மாறிற்று. அப்பொழுது அன்னை ‘‘ஒற்றுமையுண்டு பண்ண எனக்கு ஒருவரில்லை’’ என்று கூறினார்.

இரவில் அன்னை சாதகர்களுடன் சூட்சும உலகிலிருப்பது வழக்கம். அங்கு இக்கூட்டத்தில் போட்டியிடும் இரு தலைவர்களை அன்னை கண்டார். **சூட்சும உலகிலும் இருவரும் சண்டையிடுவதைக் கண்டார்**.

நம் வீட்டில் சண்டை குறைந்து சுமுகம் ஏற்பட்டால், வீடு களையாக மாறி, சுபீட்சமாக மாறும்.

*மனம் அடங்கினால், மனிதர்கள் அடங்குவார்கள்.*

- **மனம் அடங்குவது என்பது முக்கிய கட்டம். பலரால் முடியாது, சிலரால் முடியும்.**
- **மனம் வாழ்வு மையம் என்பதால் மனம் அடங்கினால், நம் வாழ்வு நமக்குக் கட்டுப்படும்.**
- **வாழ்வு கட்டுப்படுவதை நாம் "நினைத்ததெல்லாம் நடக்கிறது" என்போம்.**
- **நினைப்பதைச் சாதித்தால், செய்வனவெல்லாம் கூடிவரும்.**
- **செய்வனவெல்லாம் கூடி வந்தால், அதற்கு அதிர்ஷ்டம் எனப் பெயர்.**
- **நம் மனதில் எண்ணமும், உணர்வும் ஒற்றுமைப்பட்டால் நமக்கு அதிர்ஷ்டம் வந்துவிட்டது எனப் பொருள்.**

☆ ☆ ☆



**"அன்பர் உரை"**

## சத்திய ஜீவன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

*(ராணிப்பேட்டை தியான மையத்தில் 21.2.2002 அன்று திருமதி. வசந்தா லக்ஷ்மிநாராயணன் நிகழ்த்திய உரை)*

மனித ஜீவன் பரமாத்மாவை நாடுகிறது. இதை பக்தி, ஆர்வம் என்று கூறுகிறோம். உடலிலும், உணர்விலும், மனதிலும், பக்தியும், ஆர்வமும், சந்தோஷமாகவும் ஆனந்தமாகவும் பூரிப்பாகவும் ஆகின்றன. சத்திய ஜீவனை விஞ்ஞானமயப் புருஷன் என்று கூறுகிறோம். இதற்கடுத்த நிலை ஆனந்தமயப் புருஷன். ஆனந்தமயப் புருஷனது ஆனந்தம் சத்திய ஜீவனுள் புதைந்து இருக்கும். (**ஆன்மீகத்தில் மௌனமும், சாந்தியும் இறைவன் என்று கூறுவார்கள்**) சரணாகதிக்கு முன் உள்ள ஒன்பது கட்டத்துள் எட்டாவது கட்டமாகப் பூரிப்பை பகவான் சொல்கிறார். ஆனால் ஆன்மீக மரபில் பக்தன் பூரிப்படைந்து களியாட்டம் ஆடுவதைவிட பக்தியாலோ, ஞானத்தாலோ வரும் சாந்தியைப் பெரியது என்பார்கள். ஏனெனில் சாந்தியே இறைவன் எனக் கருதப்படும். ஆனால் சத்திய ஜீவனைக் கடந்து செல்லும்போது பூரிப்பே சாந்தி, சாந்தியே பூரிப்பு என்றாகும். **நிலைமை உயர்ந்தால் சிறியது பெரியது ஆகும்**. பொதுவாகக் குடும்பங்களில் பதவி உள்ளவன், சம்பாதிப்பவன் முக்கியமாகக் கருதப்படுவான். உயர்ந்த குடும்பங்களில் அது உள்ளவனும், இல்லாதவனும் சமமாக இருப்பான். சம்பாதிப்பவனும், சம்பாதிக்காதவனும் சமமாகக் கருதப்படுவான். சத்தியஜீவியம் பூரிப்பிற்கும், சாந்திக்கும் உள்ள ஒற்றுமையை வெளிக்கொணரும். அமைதியும் சந்தோஷமும் உயர்ந்தால் தீவிரமடைந்து, பூரிப்பாகி, ஆனந்தமாகி, அனந்தமாக முடியும். இந்த மாறுதல் ஏற்பட்டால்,

1. மனத்தில் இது ஞானமாகவும், திருஷ்டியாகவும் தெரியும்.
2. உணர்வில் தீவிரமான பக்திலயமாகத் தெரியும்.
3. செயலில் ஆனந்தமான சக்தியாக வெளிப்படும்.
4. உடலில் ஆன்மீகமயமான தூய்மையான வாழ்வாக மாறும்.
5. பிரபஞ்சத்தில் நிகழ்ச்சிகள் தங்களின் இரகசியமான பிரம்மானந்தத்தை வெளிப்படுத்தும்.

இனி, செயல். அதாவது புறவாழ்வில் உள்ள செயல் திருவுருமாற்றப்பட வேண்டும். இதற்கு பர்சனாலிட்டி என்ற கருத்தை விளக்கவேண்டும். மேலும் சத்தியஜீவிய சுபாவத்தில் நியாயம், தர்மம் என்பவற்றையும் விளக்கவேண்டும். சத்தியஜீவியத்தில் பர்சனாலிட்டி, இம்பர்சனாலிட்டி (impersonality) பிணக்கானவையல்ல. உதாரணமாகப் பையனுக்குப் பெரிய வேலை வந்து நாட்டைவிட்டுப் போகவேண்டிய சந்தர்ப்பம் வந்திருக்கிறது, ஆனால் வயதான பெற்றோர்களுக்கு அவனின் ஆதரவு தேவைப்படுகிறது, இது பிணக்கு. பையன் பெற்றோர்களின் சௌகரியமே தன் சௌகரியம் என்று கொண்டிருந்தால் அல்லது பெற்றோர் பையனுடைய வாழ்வே தங்கள் வாழ்வு என்று கொண்டிருந்தால், இந்தப் பிணக்கில்லை. இதை நாம் ஏற்றுக்கொண்ட அரசியல் கட்சி ஊழியராக வேலை செய்யும்பொழுதும், ஸ்தாபனத்தின் இலட்சிய ஊழியராக இருக்கும் பொழுதும் பிணக்கில்லை என்று காண்கிறோம். மனமாற்றம் ஏற்படுவதால் பிணக்கில்லை. அங்கு (சத்தியஜீவியத்தில்) நிலைமை மாறுவதால் பிணக்கில்லை. ஏனெனில் அங்கு அகந்தை மையம் இல்லை. சிருஷ்டியிலும், பரிணாமத்திலும் பிணக்கிற்கு மூலகாரணம் அகந்தை. அகந்தை ஒழிந்த லோகம் என்பதால் சத்தியஜீவிய லோகத்தில் இந்தப் பிணக்கு இல்லை. மேலும் இவற்றிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. ஆபீஸில் ஒருவரை செந்தாமரைக் கண்ணன் என்று கூப்பிடுவார்கள். அவர் கோட், சூட், டையுடன் வேலை செய்வார். அவர் அதிகாரம் ஆபீஸில் செல்லும். ஆபீஸில்



உள்ளவர்கட்கு அவர் செந்தாமரைக் கண்ணன். அவரை நினைத்தால் அவர்கள் கண்முன் வரும் உருவம் கோட், சூட், டை. வீட்டில் அவர் வேஷ்டி கட்டிக் கொண்டிருப்பார். யாராவது ஆபீஸிலிருந்து செந்தாமரைக் கண்ணனைப் பார்க்கவேண்டும் என்றால் குழந்தை யார் அது என்று கேட்கும். குழந்தைக்கு செந்தாமரைக் கண்ணனைத் தெரியாது, அப்பா தெரியும். ஆபீஸில் இருப்பவருக்கு அப்பா தெரியாது; கோட், சூட், டை, செந்தாமரைக் கண்ணனைத் தெரியும். அவர்களால் இவை இரண்டையும் பிரித்துப் பார்க்க முடியாது. அதுபோல் கீழ்லோகங்களில் உள்ள பிரிந்துள்ள அம்சங்கள் மேல்லோகங்களில் சேர்ந்து இருக்கின்றன.

இந்தக் கருத்தை விளக்குவது சற்றுக் கடினம். இம்பர்சனாலிட்டியை (impersonality) பொதுவிதி எனவும் பர்சனாலிட்டியை அதன் குறிப்பிட்ட விளக்கம் எனவும் கொள்ளலாம்.

இம்பர்சனாலிட்டி, பர்சனாலிட்டி என்றால் என்ன?

பொதுவானது, குறிப்பானது என்று இரு பகுதிகள் உண்டு. கிராப்பு, காபி, சாம்பார், மூக்குக் கண்ணாடி, கையெழுத்து, உடை என்பனவை அனைவருக்கும் பொதுவானவை, ஆனால் ஒருவர் கையெழுத்து மற்றவர் கையெழுத்துபோல் இருப்பது இல்லை. பலரும் காப்பி போட்டால் பலவிதமாக இருக்கும். காப்பி என்பது பொது, ஒருவர் போடும் காப்பி குறிப்பானது. கோபம் என்பது பொது, ஒவ்வொருவருடைய கோபம் வெவ்வேறு வகையாக இருக்கும். அதுபோல் மனிதச் சுபாவம், விலங்கின் சுபாவம், தாவரத்தின் சுபாவம், தெய்வத்தின் சுபாவம், ஜடத்தின் சுபாவம் ஆகியவற்றிற்குப் பொதுவான சுபாவம் உண்டு. அது பிரபஞ்சத்தின் சுபாவம் ஆகும். பிரபஞ்சத்தின் சுபாவத்தை இம்பர்சனாலிட்டி என்பர்.

இம்பர்சனாலிட்டி அதனுடைய உற்பத்தி ஸ்தானத்தில் அடிப்படையானது. மனிதச் சுபாவம் எப்படி மனிதர்களுக்கு

அடிப்படையோ அதுபோல் பிரபஞ்ச வாழ்விற்கு இம்பர்சனாலிட்டி அடிப்படை. இம்பர்சனாலிட்டி என்பது ஒரு தீவிரமான சக்தி, ஒரு ஸ்தாபனத்தின் அதிகாரம் போன்றது. ஸ்தாபனத்திலுள்ள ஒவ்வொருவரும் ஸ்தாபனத்தின் அதிகாரத்தைத் தங்கள் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள், இது பர்சனாலிட்டியைப் போன்றது. ஜீவனின் சுபாவத்தில் தூய்மையான அம்சம் இம்பர்சனாலிட்டி. அன்பு என்பது செலுத்துபவரைப் பொருத்தது. அன்பு பொது, ஒருவருடைய அன்பு குறிப்பானது. வீரம் என்பது வீரனைப் பொருத்தது. வீரம் பொது, ஒருவருடைய வீரம் குறிப்பானது. பொதுவானதும், குறிப்பானதும் வெவ்வேறல்ல. சத்திய ஜீவன் இறைவனின் சுபாவத்தை உடையவன். இறைவனின் சுபாவத்தை அவன் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்துகிறான். அது இயற்கையின் புதிர். பல சமயம் நாம் இதுபோன்றவற்றைக் காண்கிறோம். வழக்கமாக பொய் சொல்பவர் முக்கியமான கேசில் தனக்கு எதிராக மெய் சொல்கிறார். பயந்தாங்கொள்ளி ஒரு சமயம் ஆவேசமாகத் தன்னை வெறி ஏற்றுபவனைத் தாக்குகிறான். சாது மிரண்டால் காடு கொள்ளாது சாதுவும் மிரள்வார். அடக்கத்திற்கே பேர்போன பெண் பிரம்மச்சாரியின் கோபத்தைக் கண்டு சிரித்துக் கேலி செய்கிறாள். இவை இயற்கைக்கு மாறானவை. நமக்குப் புரியாத புதிர். நாம் குறிப்பிட்ட அம்சத்தை அறிவோம், பொது அம்சத்தை அறிவதில்லை. ஒரு நேரம் பொது அம்சம் வெளிவந்தால் நமக்கு அது ஆச்சரியமாக இருக்கும், சத்தியஜீவியத்திற்கு அது ஆச்சரியமாக இருக்காது.

*தொடரும்.....*

☆ ☆ ☆



## அன்பர் கடிதம்

ஓம் நமோ பகவதே.

அன்புள்ள மதிப்பிற்குரிய அன்னைக்கு வணக்கத்துடன் எழுதிக்கொள்வது.

சென்ற வாரம் 27.12.02 வெள்ளியன்று என் பெரிய மகன் கல்லூரியிலிருந்து வரும்பொழுது தன்னுடைய மணிபர்ஸை தவறவிட்டுவிட்டான். வீட்டிற்கு வந்து உடை மாற்றம் செய்யும்பொழுதுதான் அது தொலைந்துவிட்டது தெரிந்தது. கல்லூரியில் விட்டுவிட்டானா? அல்லது இரண்டு சக்கர வாகனத்தில் வரும்பொழுது தவறவிட்டு விட்டானா என்று எதுவும் புரியவில்லை. எங்கள் இருவருக்கும் என்ன செய்வது என்று புரியாமல் தவித்தோம். அதில் மிகவும் முக்கியமான கல்லூரி ஐடென்டிட்டி கார்டு, பெட்ரோ கார்டு, லைசென்ஸ் ஆகியவை இருந்தன. அன்னையின் படங்களுடன் மற்றும் சில படங்களும் இருந்தன. அழுகை அழுகையாக வந்த எங்களுக்கு அன்னையிடம் சமர்ப்பணம் செய்வதைத் தவிர வேறு ஒன்றும் தோன்றவில்லை. நாங்கள் இருவரும் அன்னையிடம் கெஞ்சி கதறினோம். அன்னைக்குக் காணிக்கை எடுத்து வைத்துவிட்டு அன்னையின் கால்களை இறுகப் பிடித்துக்கொண்டு கெஞ்சினேன். தாயே, அம்மா, அது யார் கண்ணில் பட்டாலும் அவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடுத்து எப்படியாவது எங்களிடம் வந்து சேரக் கருணை புரி தாயே என்று கூறி ஓம் நமோ பகவதே சொல்லிக்கொண்டேயிருந்தேன். இரண்டு மணி நேரம் ஆகியிருக்கும். என்ன ஆச்சரியம்! இரண்டு பையன்கள் வந்து இதுதான் ஷியாம் குமார் வீடா? நீங்கள் உங்கள் பர்ஸை தொலைத்துவிட்டீர்களா? என்று கேட்டுவிட்டு, இது 2, 3 நபர்களுடைய கை மாறி வந்துள்ளது. எனவே தாங்கள் எல்லாம் சரியாக இருக்கிறதா

என்று பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறி அதைக் கொடுத்தார்கள். அதிலிருந்த ஒரு சிறிய தொகையைத் தவிர அனைத்தும் பத்திரமாக இருந்தன. அன்னையின் கருணையை என்னவென்று சொல்வேன். உடனே அன்னைக்கு நன்றி கூறி அவரது பாத மலர்களில் சரணடைந்தேன். இத்துடன் அன்னைக்காக எடுத்து வைத்த காணிக்கையைச் சமர்ப்பிக்கிறேன்.

நன்றி! நன்றி! நன்றி!

✯ ✯ ✯

### ஸ்ரீ அரவிந்த சுடர்

புறநிகழ்ச்சியால் உந்தப்படுவது மனித சுபாவம். புறச் சூழ்நிலையின்றி, தானே உள்ளிருந்து செயல்படுபவன் தவறாது வெற்றி பெறுவான். உள்ளேயும் ஆரம்பிக்க மறுப்பவன், இறைவனை எதிர்பார்ப்பவன், அவன் இறைவன் திட்டப்படி நடப்பவன்.

*இறைவன் செயல்பட நாம் செயல்படக்கூடாது.*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உடல் பழக்கத்தை வலியுறுத்தாவிட்டால், உணர்வு ஆசையைவிட முன்வந்தால், மனம் அன்னை முடிவை ஏற்றால் ஆத்ம சமர்ப்பணம் முடியும்.

*ஆசையும் போய் அன்னை முடிவு வருவது சமர்ப்பணம்.*



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

அண்ணன் - இதனுள் சில அனுபவங்கள், உண்மைகள் அடங்கியுள்ளன. அவை,

1) விவரம் தெரியாமற் பேசும்பொழுது நல்லவர்களைக் கெட்டவர்கள் என்போம்.
2) அனுபவமில்லாத விஷயத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது அபிப்பிராயம் தவறாகும்.
3) அறிவு, அனுபவத்தைத் தர முடியாது.
4) உணர்வு பெறுவது அனுபவம், மனம் பெறுவது அறிவு.
5) தோற்றமும், உண்மையும் மாறுபட்டும், வேறுபட்டும், எதிராகவுமிருக்கும்.

எலிசபெத் டார்சியை அலட்சியம் செய்யும்பொழுது பணக்காரனை அலட்சியம் செய்வதாக நாம் எடுத்துக்கொள்கிறோம். பணக்காரன் கர்வமாக இருந்தால், அலட்சியம் செய்வது உயர்ந்த பண்பு என நினைக்கிறோம். அதிலுள்ள உண்மை முழுமையானதன்று.

எலிசபெத் £2000 எஸ்டேட்டில் வளர்ந்தவள் என்றாலும் £10,000 எஸ்டேட் என்றால் என்ன என்று அறியாதவள். பெம்பர்லி மாளிகையைக் கண்டவுடன், அதற்கும் லாங்பார்ன் என்ற தன் வீட்டிற்கும் உள்ள வித்தியாசம் தெரிகிறது. பெம்பர்லி அரண்மனை. தன் வீட்டில் housekeeper ஹில் என்பவளை பெம்பர்லி housekeeper ரேனால்ய்ஸ் என்பவரோடு ஒப்பிட்டால் ஹில்,

ரேனால்ய்ஸ் வீட்டு வேலைக்காரி போலிருப்பது தெரிகிறது.

கண்ட காட்சி கற்பனையைக் கடந்தது. உடல் புல்லரித்தது. மனம் மாறியது. டார்சியை நெதர்பீல்ட்டில் பார்க்கும்பொழுது டார்சியின் உண்மைச் செல்வ நிலை தெரியவில்லை. தெரிய முடியாது. மனம் வெறுப்பாக இருந்த சமயம் டார்சியைப் பற்றி விக்காம் சொல்லிய பொய்க் கதை காதில் விழுந்தது. மனம் மாறிய சமயம் டார்சியின் உயர்வு காதில் விழுகிறது. விக்காம் தறுதலை என்ற சொல் கேட்கிறது. அறிவு என்பது மனத்தின் உணர்வைப் பொருத்தது என்ற ஆன்மீக உண்மையை அறிகிறோம்.

டார்சி பார்வைக்குக் கர்வமாகத் தோன்றினாலும், கர்வம் அவனிடம் கொஞ்சமுமில்லை என்று கேள்விப்படுகிறாள். Impression is far from reality. தோற்றம், உண்மையிலிருந்து மாறுபட்டிருக்கும். தோற்றத்தை முடிவாகக் கொள்வது சரியாகாது.

பெம்பர்லியில் ரேனால்ய்ஸ் டார்சியைப் பற்றி "இனிமையானவன், நெகிழ்ந்த நெஞ்சம் உடையவன், 4 வயதிலிருந்து என்னிடம் கடுமையாக ஒரு சொல் சொல்லியதில்லை'' என்றபொழுது எலிசபெத்தை Mrs.கார்டினர் "இது டார்சியா?" என்னும்படி நோக்கினார்.

தம்பி - நெதர்பீல்ட்டில் எலிசபெத் எப்படி டார்சியின் உண்மை நிலையை அறியமுடியும்?

அண்ணன் - எலிசபெத்திற்கு டார்சியைப் பற்றி உண்மை தெரிய முடியாது. அவள் வெறுப்புடனிருந்ததால் வெறுப்புக்குரிய



செய்தி வருகிறது. அத்துடன் இரு எதிரான குணங்களும் ஒருவரிடமே இருக்கும் என்பது உண்மை. ஒருவரிடமேயிருப்பதை நாம் அறியவேண்டும்.

தம்பி - அது எப்படி?

அண்ணன் - கணித மேதை என்பதால் அவர் நல்லவர் எனக் கொள்கிறோம். நோபல் பரிசு பெற்றவர் உயர்ந்தவர் என்று வைத்துக்கொள்கிறோம். அறிவுக்கும், பண்பின் உயர்வுக்கும் சம்பந்தமில்லை. அழகுக்கும், உயரத்திற்கும் சம்பந்தமில்லை என்பதுபோல், இரு மாறான, எதிரான குணங்கள்.

தம்பி - இதற்குரிய உதாரணங்கள் உண்டா?

அண்ணன் - உதாரணங்கள் உண்டு. நாம் அறியவேண்டியது மேற்படி உண்மை. உதாரணம் சொல்ல நாம் உயர்ந்தவரின் தாழ்ந்த குணங்களைக் கூறவேண்டும். தாழ்ந்தவரின் உயர்ந்த குணங்களையும் சொல்லவேண்டும். அது நமக்குப் பயன் தாராது. அவசியமானால் கூறலாம்.

தம்பி - ரேனால்ய்ஸ் பேசியதைக் கேட்ட கார்டினர் "இவர்கள் சொல்வது விக்காம் கூறியதற்கு எதிராக இருக்கிறதே" என்கிறார். எலிசபெத் இதையும் கேட்டபின் இதை நம்ப மறுத்து விக்காம் நல்லவன் என மனதால் உறுதிப்படுத்துகிறாள்.

அண்ணன் - கெட்டவனை நல்லவன் என நினைத்தால் மறுநாள் கெட்டவன் கெட்டதைச் செய்துவிட்டான் எனச் செய்தி வருகிறது.

தம்பி - விக்காம் கெட்டவன். மனம் அவனை இதமாக நினைக்கிறது. அதனால் கெட்ட குணம் வலுப்பட்டு,

நமக்குக் கெட்டது செய்ய முடிகிறது. லிடியாவுடன் விக்காம் ஓடிவிட்டான் என்ற செய்தி மறுநாள் வருகிறது என்று நாம் புரிந்துகொள்ள வேண்டுமா?

அண்ணன் – நம் மனம் இடம் கொடுக்காமல் நமக்கு ஒரு காரியம் நடக்காது என்ற சட்டம் இங்குத் தெரிகிறது. அகம், புறத்தைப் பிரதிபலிக்கிறது.

தம்பி – இந்த ஞானம் நமக்கு நடக்க இருக்கும் தவறுகளைத் தடுக்கப் பயன்படுமா?

அண்ணன் – நம் மனம் தவறான உணர்வுக்கு இடம் கொடுக்காவிட்டால், நமக்குத் தவறு நடக்க முடியாது என்பது ஆன்மீக உண்மை. அன்னை கூறும் உண்மை. நம் அனைவர் அனுபவத்திலும் கண்ட உண்மை.

தம்பி – எலிசபெத் வீட்டில் நடந்த அசம்பாவிதத்திற்கு அவர்கள் இடம் கொடுத்துவிட்டார்கள் என்று பொருளா?

அண்ணன் – எலிசபெத்தைப் பொருத்தவரை விக்காம் மீதுள்ள அளவுகடந்த கனிவுதான் காரணம். தாயறியாத சூலுண்டோ என்பதைப்போல், நம் மனம் இடம் தாராமல் நமக்கு ஒரு காரியம் நடக்காது.

தம்பி – காலின்ஸ் ஏன் இப்படி அளவு கடந்து பேசுகிறார்? அனைவரும் சிரிக்கிறார்களே.

அண்ணன் – புதியதாக நாம் கற்றுக்கொண்டது அடிக்கடி நம்மைப் பேசச் சொல்லும். நம் அறிவுக்கு அதிகமாக நாம் பயின்றால் வாய் ஓயாமல் பேசச் சொல்லும். அளவுக்கு மீறியிருப்பதால் தானே நிரம்பி வழியும்.

காலின்ஸ் தகப்பனார் படிக்காதவர். நாகரீகமில்லாதவர். காலின்ஸ் முதல் தலைமுறையில் படித்தவர்.



பல்கலைக்கழகத்தில் பயின்றவர். கல்வியை உயர்ந்த முறையில் அவரால் பெற முடியவில்லை. அதன் புறத் தோற்றத்தையே பெற்றார். உயர்ந்த முறையில் பெற்றிருந்தால் அது மனதில் ஊன்றி அறிவுடன் கலந்து உள்ளே உறையும். மூளையும், அறிவும் சிறியன. முதல் தலைமுறை படிப்பு. தாம் பெற்ற கல்வியைப் பெரிதாக நினைக்கிறார். அதனால் அது உள்ளே தங்க முடியாமல் வழிந்து ஓடுகிறது. அவரை மீறி ஓடுகிறது.

தம்பி – புதுப் பணக்காரன் ஆடம்பரமாக வாழ்வதைப் போலிருக்கிறது?

Mr.பென்னட் எப்பொழுதும் நிதானமாகப் பேசுபவர். காலின்ஸ் முதலில் வந்தபொழுது லேடி காதரீனை முகஸ்துதியாக தாம் பேசுவதுண்டு என்று அவர் கூறியபொழுது Mr.பென்னட் “அவற்றை இயல்பாகப் பேசுவீர்களா? முன்கூட்டித் தயார் செய்வீர்களா?” எனக் கேட்கிறார். இது மட்டமான கேள்வி.

அண்ணன் – Mr.பென்னட் கேட்பது Mr.காலின்ஸ்க்குப் புரியவில்லை. எலிசபெத் புரிந்து சிரிக்கிறாள். சிரிப்பை அடக்கிக் கொள்கிறாள். பென்னட் மட்டமாகப் பேசுவது காலின்ஸுக்குப் புரியவில்லை. வாழ்வின் காதில் விழுகிறது. பின்னர் பதிலை அனுப்புகிறது.

தம்பி – லிடியா ஓடிவிட்டதுடன் காலின்ஸ் அதைக் கண்டித்து கடிதம் அனுப்புவது மூலம் வாழ்வு பென்னட்டிற்குப் பதில் கூறுகிறது. நாம் மறந்தாலும், எவர் மறந்தாலும், வாழ்வு மறக்காது.

முதல் கடிதம் Mr.காலின்ஸிடமிருந்து வந்தவுடன் Mrs.பென்னட் உயிலை மாற்றவேண்டும் என்கிறார்.

அண்ணன் - பென்னட்டிற்குப் படிப்பில்லை. சட்டம் புரிய படிப்பு வேண்டும். படிப்பில்லாவிட்டால் சட்டத்தை ஏன் மாற்றக்கூடாது என்று நினைப்பார்கள். சட்டம் ஏற்பட்டதே படித்தவன் சட்டத்தின்மூலம் தன்னை ஆள அனுமதித்ததால்தான்.

தம்பி - படிப்பிற்கும் சட்டத்திற்கும் என்ன சம்பந்தம்?

அண்ணன் - படிப்பு ஏற்பட்ட பிறகுதான் சட்டத்திற்கு மரியாதை வந்தது. படித்தவன் சட்டத்தை மீறக்கூடாது என்று புரிந்துகொள்வான். சட்டத்திற்கு அதிகாரமுண்டு எனப் படித்தவன் அறிவான். படிக்காதவனுக்கு அது தெரியாது. தன்னிஷ்டம்போல் நடக்கலாம் என நினைப்பான். Mrs.பென்னட்டுக்கு படிப்பில்லாததால் (entail) உயிலை மாற்ற வேண்டுமென்று பேசுகிறாள். பெண்கள் படித்தவர்கள் என்பதால், அது முடியாது என்று விளக்கம் கூறுகிறார்கள்.

தம்பி - முதல் டான்ஸில் டார்சி எலிசபெத்தை முதலில் கவனிக்கவில்லை. பிறகு அவள்பால் ஈர்க்கப்படுகிறான். அவன் அதை அறியவில்லை.

அண்ணன் - Liking விருப்பம் என்பது மேலெழுந்தவாரியானது. Attraction கவர்ச்சி என்பது ஆழ்ந்தது. கவர்ச்சி என்பதை நாம் மட்டமான கருத்தில் பயன்படுத்துகிறோம். ஆனால் attraction என்பது உயர்ந்தது. வேறு சொல் சொல்ல முடியவில்லை.

டார்சி தன்னையறியாமல் அவள்பால் ஈர்க்கப்பட்டதால் அதனுள் உண்மையுண்டு. அது பலவகைகளில் பிறகு தெரிகிறது.



- ***திருமணத்தில் முடிகிறது.***
- ***எலிசபெத் திட்டியது டார்சிக்குக் கோபத்தை உண்டு பண்ணவில்லை.***
- ***அவள் கடுமையாகச் சொல்லியவற்றை உண்மை என ஏற்று மனம் மாறுகிறான்.***

தம்பி - இந்தக் கதையைப் பயன்படுத்தி நாம் என்ன அறியலாம்?

அண்ணன் -
1) ***மனிதன் வளரும் வழி என்ன?***
2) ***சமூகம் எப்படி வளர்கிறது?***
3) ***சாதிப்பதெப்படி?***
4) ***செல்வம் எப்படி உற்பத்தியாகிறது?***
5) ***வாழ்வில் சந்தோஷத்தை எப்படி அதிகரிப்பது?***
6) ***உலகம் அற்புதம் என அறிவது.***
7) *The Life Divine* ***இல் கூறும் தத்துவங்களை அறியலாம்.***

தம்பி - கதையின் மையக் கருத்தென்ன?

அண்ணன் - *The Life Divine* p.239இல் ஜடமே சச்சிதானந்தம் என்று பகவான் விவரிப்பதை, நாமே சச்சிதானந்தம் என அறிய கதை உதவும்.

தம்பி - *The Life Divine*இல் என்ன சொல்கிறார்?

அண்ணன் - நாம் ஜடம் என்பது இறைவன் ஒளிந்துள்ள உடல்.

உடலினுள் இறைவனும், ஜீவியமும் ஒளிந்துள்ளன. மேலும் உடலே ஆனந்தம். ஆனந்தமான உடல் மறைந்துள்ள ஜீவியத்தை ஆசைகாட்டி உள்ளுறை இறைவனை வெளிக்கொணர முயல்கிறது என்று *The Life Divine* கூறுகிறது.

தம்பி - புரியாத தத்துவமாக இருக்கிறதே.

அண்ணன் - தத்துவம் என்றால் புரியாது என்றுதானே அர்த்தம்!

தம்பி - கதையில் தத்துவம் எங்கே வருகிறது?

அண்ணன் - உள்ளுறை இறைவனை மறைந்துள்ள ஜீவியம்மூலம் புறஉருவமான ஆனந்தம் அழைக்கிறது என்பது தத்துவம். இந்தக் கதையில் 4 திருமணங்கள் நடைபெறுகின்றன. திருமணமே இவர்களுடைய "இறைவன்".

புற நிகழ்ச்சிகள் உள்ளுறை ''திருமணத்தை'' இவர்களுடைய குணம் (ஜீவியம்)மூலம் வெளிக் கொணர்கிறது.

தம்பி - திருமணம் கடவுள் என்றீர்கள். அப்படியானால் ஆனந்தமெது? புற நிகழ்ச்சிகளா? ஜீவியம் என்பது குணமா?

அண்ணன் - ஆமாம்.

தம்பி - திருமணம் எப்படி இறைவனாகும்?

அண்ணன் - உள்ளே திருமணத்திற்குரிய குணமிருந்தால் புறத்தே திருமணம் நடைபெறும். உள்ளே உள்ள குணம் மாறும்வரை திருமணம் தள்ளிப் போகிறது. ஜீவியம் மாறிய உடன் திருமணம் நடக்கிறது.

தம்பி - இந்த மாற்றத்தைப் புற நிகழ்ச்சிகள் செய்கின்றனவா?

அண்ணன் - நம் வாழ்வைப் புரிந்துகொண்டால், கதை புரியும், கதை புரிந்தால் நம் வாழ்வு புரியும்.

தம்பி - இப்படிச் சொல்லலாமா?

- ***மனிதன் இறைவனைத் தேடுகிறான். அவன் உள்ளேயிருக்கிறான். உடல் ஆனந்தமயமானது.***



***உடல் என்பது புற நிகழ்ச்சிகளாலானது. நம் குணம் இறைவனைக் காண மாறும்படிப் புறநிகழ்ச்சிகள் நிர்ப்பந்தம் செய்கின்றன.***

- ***பாத்திரங்களுக்குள் மறைந்துள்ள திருமணத்திற்குரிய குணம் எழும்வரை, பாத்திரங்களுடைய சுபாவம் - குணம் - மாறும்படி நிகழ்ச்சிகள் நிர்ப்பந்தம் செய்கின்றன.***

அண்ணன் - ஓரளவு பொருத்தமான விளக்கம். கதையில் டார்சியும், எலிசபெத்தும் உயர்ந்த திருமணத்திற்குரியவர்கள். அவர்கள் மனம் அதை நாடுகிறது. குணம், சுபாவம் இடம் கொடுக்கவில்லை. புற நிகழ்ச்சிகளால் சுபாவம் மாறியவுடன் டார்சி, எலிசபெத்தை மணக்கிறான்.

தம்பி - நமக்கு அதிர்ஷ்டம் என்ற இறைவன் உள்ளேயிருக்கிறான். நம் சுபாவம் அவன் வெளிப்படுவதை அனுமதிக்கவில்லை. லிடியா ஓடிப்போனவுடன் எல்லோர் சுபாவங்களும் மாறுகின்றன. திருமணம், அதிர்ஷ்டம், இறைவன் என்பன உள்ளிருப்பது நமக்குத் தெரிகிறது.

அண்ணன் - நமக்கு நடப்பவை நாம் மாறவேண்டும் என்று கூறுகின்றன. அதை ஏற்று மாறினால் அதிர்ஷ்டம் - இறைவன் - உள்ளேயிருந்து வெளிவருகிறது.

- ***இன்று நம் சுபாவம் அதிர்ஷ்டத்திற்குத் தடை.***
- ***சுபாவத்தை மாற்றினால் அதிர்ஷ்டம் வரும்.***

தம்பி - இது புரிகிறது. *The Life Divine* இதைத்தான் கூறுகிறதா? மேற்சொன்ன அத்தியாயத்தில் "நம் நோக்கம் view மாறினால் ஜடம் திருவுருமாறும்'' என்கிறார். நாம் அதைச் ''சுபாவம் மாறினால் அதிர்ஷ்டம் வரும்'' என்கிறோம்.

அண்ணன் – டார்சிக்கும், எலிசபெத்திற்கும் சுபாவம் மாறியவுடன் அதிர்ஷ்டம் வருகிறது. அதுபோல்,

- நாம் இறைவனின் உருவம். நம்முள் இறைவன் ஒளிந்துள்ளான். உலக நிகழ்ச்சிகளால், அவற்றின் ஸ்பர்சத்தால், அவன் வெளி வருகிறான் என நாம் அறிய வேண்டும். அதை நம் வாழ்வுக்குரிய முறையில் சொல்லவேண்டுமானால்,
- நம் வாழ்வு எனும் உலகை நிர்ணயிப்பதும், சிருஷ்டிப்பதும் நாமே என்று முடிக்கலாம்.

தம்பி – Pride & Prejudice என்ற கதையை வாழ்வின் உண்மையான பிரதிபலிப்பாகக் கொள்ளலாம் என்று கூறுகிறோமே?

அண்ணன் – ஆமாம். அது பொதுவாக எல்லாக் கதைகளுக்கும் பொருந்தும்.

- எந்த ஒரு நிகழ்ச்சியும் வாழ்வின் சிறு உருவம் miniature எனக் கூறலாம்.
- எந்த நிகழ்ச்சியையும் நம் விருப்பு வெறுப்புகட்கு உட்படுத்தக்கூடாது. எலிசபெத்தும், விக்காமும் அதைச் செய்கிறார்கள். அது தவறு.
- பாத்திரங்களை ஆத்மாவாகக் கருதவேண்டும். தங்களுக்குரிய ஆன்மீக உண்மைகளைக் கண்டுபிடிக்க அவை முயல்வதைக் காணவேண்டும்.
- ஒவ்வொரு பாத்திரத்திலும் **நம்மைக்** காண வேண்டும்.
- ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் **நம் வாழ்வு** பிரதிபலிப்பதைக் காண்பது அவசியம்.

தம்பி – Mrs.பென்னட்தான் எதையும் ஆரம்பிக்கின்றாள். முதன்முதலில் Mr.பென்னட்டை நெதர்பீல்ட்டுக்குப் போகச் சொல்வதே Mrs.பென்னட்தான்.



அண்ணன் – கடைசிவரை தனக்கு வேண்டும் என்பதை உடனே கேட்டு, வற்புறுத்தி, பெற முயல்வது Mrs.பென்னட்.

தம்பி – அப்படி Mrs.பென்னட் செய்வது எதுவும் கூடி வருவதில்லை. கூடிவந்தாலும் காரியம் தள்ளிப் போகிறது.

அண்ணன் – நாமே ஆரம்பிக்கக் கூடாது (initiative). அதுவும் அவசரப்பட்டு ஆரம்பிக்கக் கூடாது என்பது அன்னைச் சட்டம். ஆரம்பித்ததைத் தியாகம் செய்ய வேண்டும் என்கிறார் அன்னை. Mrs.பென்னட் எதிராக நடக்கிறார்.

தம்பி – முடிவாக Mrs.பென்னட் 3 திருமணத்தை முடிக்கிறாரே. அதை எப்படிப் புரிந்துகொள்வது?

அண்ணன் – Mrs.பென்னட் அளவுகடந்த சக்தியுடையவர் (full of energy). சக்தி காரியத்தை முடிக்கும். பெண்கள் திருமணத்தில் குறியாக இருக்கிறார். தெம்பிருந்து, காரியத்தில் கண்ணாக இருந்தால், காரியம் முடியும். அவசரப்பட்டு நாமே ஆரம்பித்தால் கெடும்.

தம்பி – கணவனை வற்புறுத்தி பிங்லியைப் பார்க்க அனுப்புகிறார் Mrs.பென்னட். ஜேனைக் குதிரை மேல் அனுப்பி, அங்கேயேயிரு என்கிறார். இப்படியெல்லாம் செய்தால் திருமணம் முடியும் என்று செய்கிறார். என்ன நடக்கிறது? நெதர்பீல்ட்டைக் காலி செய்துவிட்டு அனைவரும் போய்விடுகின்றனர்.

அண்ணன் – தந்திரமாக நடப்பது Mrs.பென்னட் வழக்கம். ஜேன் வண்டியில் போனால் திரும்பி வரவேண்டும். குதிரை மீது போனால், மழை பெய்தால், அங்கேயே இருக்கவேண்டும் என்பது அவர் திட்டம். அந்த அளவுக்குத் திட்டம் நிறைவேறுகிறது. அடுத்த கட்டத்தில் காரியம் கெட்டுப் போகிறது.

தம்பி - தந்திரம், யுக்தி, திட்டம் போடுதல் காரியத்தைக் கெடுக்கும் என்கிறார் அன்னை.

அண்ணன் - அது உண்மைதானே. எப்பொழுதும் இவை எதிரான பலனைத்தானே தருகின்றன.

தம்பி - அப்படித்தானே லிடியாவை பிரைட்டனுக்கு அனுப்பிவைக்கிறார் Mrs.பென்னட். அது ஓடிப்போக வசதியாகிவிட்டதல்லவா?

அண்ணன் - யுக்தி எப்பொழுதும் நல்ல பலன் தருவதில்லை.

தம்பி - இரண்டாம் முறை பிங்லி வந்தபொழுது மறுபடியும் Mrs.பென்னட் கணவரைப் போகச் சொல்கிறார். கணவர் மறுத்துவிடுகிறார்.

*தொடரும்.....*

☆ ☆ ☆

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பெரிய இலட்சியம் என நாம் பின்பற்றுவதை ஆராய்ந்து பார்த்தால், அர்த்தமற்றவர்களுடைய போக்கிலிருந்து அது சற்றே மாறுபட்டு இருப்பது தெரியும். முழுவதும் அர்த்தமற்ற செயலின் பின் திருவுள்ளம் செயல்படுவதைப் பார்க்கலாம்.

*அர்த்தமற்றதை அர்த்தமாக்குவது திருவுள்ளம்.*





**p.36 His equal spirit gave its vast assent**

**சாந்தமான அவனது ஆத்மா அவனை ஆமோதித்தது**

- ❒ பகுதியான மனிதனை முழுமையான ஜீவனாக்கியது.
- ❒ ஆழ்ந்த ஆத்ம நிலையை முடிவில் வெற்றியாகக் கண்டுகொண்டான்.
- ❒ அனந்தத்தின் அரசில் நிலையான நிர்வாகம்.
- ❒ மோனத்தின் உறுதி அளிக்கும் முடிவான பாதுகாப்பு.
- ❒ சலனமழிந்த சாம்ராஜ்யத்தில் நிலையான குடியிருப்பு.
- ❒ ஜீவனின் சிகரம் பிரம்மத்தின் அமைதியில் உறைகிறது.
- ❒ உயர்ந்த மட்டத்தில் அவன் மனம் உலவுகிறது.
- ❒ மந்திரத்தின் தந்திரத்தை மனம் குனிந்து பார்க்கிறது.
- ❒ உஷையைத் தாங்கும் இரவின் மடியில் உள்ள தெய்வீகக் குழந்தை.
- ❒ காலத்தைக் கடந்தவன் காலத்தில் மாறுவேடம் பூண்கிறான்.
- ❒ கலங்கிய ஆழம் அமைதியான சிகரம்.
- ❒ அமைதியின் வலிமை தரும் நிதானமான பக்குவம்.
- ❒ நீண்ட நெடிய நிதானமான பார்வை காலத்தின் கதியைக் காண்கிறது.
- ❒ மாற்றமற்ற அமைதி வாழ்வின் வழக்கங்களை எதிர்கொண்டது.
- ❒ சோகத்தையும் மகிழ்ச்சியையும் பாராட்டாத பராமுகம்.
- ❒ அற்புதமோ அழைப்போ அசைக்காத மனநிலை.

❒ **அலைகளின் ஆர்ப்பாட்டத்தை அசைவின்றி கண்டான்.**

❒ **அகன்று நின்ற அமைதி அனைத்தையும் ஆதரித்தது.**

மனிதன் அன்றாட வாழ்வை அவன் ஆத்மாவின் வாழ்வாகக் கொண்டு அதையே சதம் என நினைக்கிறான். அவனது வாழ்வு அகன்ற கடலின் ஆர்ப்பரிக்கும் அலைகள். ஆழ்ந்த சமுத்திரம் அவன் ஜீவன். ஜீவன் முழுமையானது. அலைகள் மேலோட்டமானவை. அனந்தம் ஆழத்தின் அமைதி. அன்றாட வாழ்வுக்கு அதுவே அஸ்திவாரம். **அந்த அஸ்திவாரமே ஆர்ப்பாட்டமாக மாறுகிறது**. மேலோட்டமான அலைகளைக் கடந்து, ஆழத்தில் உள்ள அமைதியைக் காணும் பார்வை மனிதனுக்கில்லை. அதையும் கடந்தது அலைகளையும் அடித்தளத்தில் ஆதரிக்கும் அமைதி. அவையே முடிவல்ல. **ஆர்ப்பாட்டமான அவ்வலைகளே அமைதியின் அடுத்த உருவம்**. அலைகள் இயற்கை, பிரகிருதி Becoming. ஆழம், அமைதி புருஷன், Being. அலைகளை அமைதியாகக் காணும் பார்வை Being of the Becoming. நம் கண்ணுக்கு லஞ்சம் தவறாகத் தெரிகிறது. சுத்தமானவன் சரியாகத் தெரிகிறது. தவறே சரி என நம்மால் நினைக்க முடியாது. இன்று நம் நாட்டில் எழுந்த இலட்சக்கணக்கான புதுக்கடைகள், கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், கட்டிடங்கள், ஓடும் பஸ்கள், சுருக்கமாக நாம் காணும் அத்தனை அபிவிருத்திகளும் கறுப்புப் பணத்தாலானவை. நாட்டில் நீதி வழங்கும் நிலையில்லை. நீதியை நாடும் மனநிலையில்லை. அநீதிக்கும் ஆர்ப்பாட்டம் உண்டு. உள்ள நிலையில் நாட்டின் சக்தி உருப்படியாக வெளிப்படுவது கறுப்புப் பணத்தால். மயிலும் மானும் அழகுள்ளவை. தேளும், பாம்பும் அருவருப்பானவை. அருவருப்பில் அழகைக் காண்பவன் கலைஞன்.

☆ ☆ ☆





## யார் சாதகர்?

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

திடீரென அன்னையின் வரவு நின்றுபோனது. இவன் மிகுந்த வாட்டமுற்றான். தன் பக்தனை அன்னை என்றும் வாடிப்போக விடுவதில்லை. இரவு சாப்பாட்டின்போது இவன் தங்கியிருந்த வீட்டுத் தலைவர் (கட்டட வேலை ஒப்பந்தக்காரர்) இவனைத் தந்தைபோல ஆதரித்தவர் இவனிடம் பேச்சுக் கொடுக்கிறார்.

என்ன மாணிக்கம்? நாளை முதல் டென்னிஸ் கோர்ட் அமைக்க நிலம் சுத்தம் செய்யும் வேலை தொடங்கப் போகிறேன். நிறைய ஆள் வேண்டும். நீயும் வருகிறாயா? என்றார்.

வருகிறேன் என்றவன், எந்த இடம்? எந்த நேரம்? என்று விசாரித்தான். ஏனெனில் அன்னையைக் காண்பது தொடர்பாக ஏதாவது முயற்சி செய்ய நேரம் தேவையாயிற்றே.

'இந்த டென்னிஸ் கோர்ட், ஸ்ரீ அன்னையின் ஆணைப்படி விரைவில் செய்ய வேண்டியுள்ளதால் நேரம் போதெல்லாம் பார்க்க முடியாது. உனக்குக் கூலி அதிகம் வேண்டுமானாலும் கிடைக்கும். வேலை சீக்கிரம் நடக்க வேண்டும்' என்றார்.

ஸ்ரீ அன்னைக்கா! ஆகா, இவன் உள்ளம் இனித்தது. 'கரும்பு தின்னக் கூலியா? என் நோக்கமே ஸ்ரீ அன்னைதாம். அவர் பொருட்டுச் செய்யப்படும் பணி எதுவாகிலும், எந்த நேரமானாலும்

நான் வருவேன். எனக்குக் கூலி முக்கியமில்லை. என் உழைப்பை, என் ஊதியத்தை யாவற்றையும் நான் அவர்க்கு அர்ப்பணம் செய்ய ஆசைப்படுகிறேன்' என்று உற்சாகமாய்க் கூறினான் சிறுவன்.

இப்படி ஓர் ஆள் கைவசம் உள்ளபோது எனக்கென்ன கவலை. அன்னை கூறிய காலத்திற்குள் 'டென்னிஸ் கோர்ட்' அமைத்துவிடுவேன் என்றார்.

மறுநாளே இருவரும் காலையிலே புறப்பட்டனர். புறப்படும்போது மேஸ்திரி தவறாது ஒரு குடையைக் கையில் மாட்டிக்கொள்வார். இதை எடுத்துச் செல்வாரே தவிர வேலை செய்யுமிடத்தில் இதைப் பயன்படுத்தமாட்டார். இதை எதற்கு வீணே சுமந்து வருகிறீர்? நீங்கள்தான் வெயில் நேரத்தில்கூட அலுப்பின்றி வேலை செய்கிறீர்களே? என்பான் சிறுவன். என்றாவது ஒரு நாள் இது பயன்படும் என்பார் மேஸ்திரி. இருவரும் கையில் ஏதேனும் உணவு எடுத்துச் செல்வர். வேலையின் இடையில் ஏதேனும் ஒரு நேரத்தில் சாப்பிடுவர். நேரம் என்று எதுவும் கிடையாது. இவர்கள் இருவரும் தகப்பனும் பிள்ளையும்போல் இருப்பர். ஒருவர் உண்ணப் போகும்போது ஒருவர் பணியைக் கவனித்துக் கொள்வர். இதில் விந்தை என்னவென்றால் கடற்கரையின் வடகிழக்குப் பகுதியிலுள்ள அந்த இடம் அத்தனை எளிதில் சுத்தம் செய்துவிட முடியாததாய் இருந்தது. காட்டுச் செடிகளும், புதர்களும் முளைத்துக் குப்பைக் கூளங்கள் மிகுந்து மிக அருவருப்பான ஒரு நிலப்பரப்பாக இருந்தது. மக்கள் அசுத்தம் செய்வதற்கென்றே ஏற்பட்ட பகுதி. பன்றிகளுக்கு விருந்தளிக்கும் நிலம். நாற்றம் பிடித்த இந்தப் பகுதி பிரெஞ்சு அரசுக்கு ஒரு கறும்புள்ளி போலிருந்தது. அன்னையின் அருள் இதை தெய்வமணம் கமழும் பகுதியாக மாற்றவே இந்த ஏற்பாட்டினை செய்திருந்தது போலும். இந்தத் திருவுருமாற்றப் பணியில் ஈடுபட்டவர் எத்தனையோ பேர். இதில் சிறப்பிடம் பெற்றவன் நம் கதாநாயகன்.



இப்பணிக்குக் கூலிக்கு ஆள் கிடைப்பதே கடினம். அதிக கூலி கேட்பவர் மத்தியில் கூலியே வேண்டாம் என்ற எண்ணம் மேஸ்திரியை வியப்பிலாழ்த்தியது. வேலை விறுவிறுப்பாய் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

*தொடரும்.....*

☆ ☆ ☆

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தீமை, பாவம், குறை ஆகியவற்றைக் கெட்டது என்கிறோம். அவை கெட்டவையானால் பிரம்மத்திற்கு அவை குறையாகும். அதிகாரத்திலுள்ளவரின் குறையை காணாமல் அவரை ஏற்பது போல், பிரம்மத்தின் "குறை"யை விலக்கிப் பார்க்கவேண்டும்.

*குறையுள்ள மனத்தால் பிரம்மத்தை அறிய முடியாது.*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன்னை வந்து சூழ்ந்து வெள்ளமாகக் கவிழ்ந்து கொள்ளும் மனிதச் சூழலை, அன்னை க்ஷணத்தில் விலக்கியிருக்க முடியும். அன்னை, அதனைச் செயல்பட அனுமதித்தார். ஆன்மீக அடக்கத்தின் உச்சம் அது.

*வாழ்வின் சூழலை வலிந்து விலக்க மறுப்பது*
*அவதாரத்திற்குரிய அடக்கம்.*

## ஜடத்தில் அறியாமை என்பது இல்லை

ஜடத்தில் அறியாமையில்லை, வாழ்வில் அறியாமையில்லை, மனத்தில் அறியாமையில்லை. சத் முதல் ஜடம்வரை எந்த லோகத்திலும் அறியாமையில்லை என்பது ஜடம் அறியாமை என நம்பும் நமக்கு ஆச்சரியமானது.

வாழ்வில் சூது, வாது, கபடு, திருடு, பொய் மலிந்துள்ளது. சீட்டாட்டத்தில் சூதுண்டு, சட்டமன்றத்தில் வாதுண்டு, பேரம் பேசுவதில் கபடுண்டு, பணப்பழக்கத்தில் திருடுண்டு, எங்கும் பொய்யுண்டு என நாம் கூறுவது பொய்யில்லை என்றாலும் மெய்யில்லை.

- **சீட்டாட்டம் நம்மைச் சூதாக நடக்கச் சொல்லி வற்புறுத்தவில்லை.**
- **சட்டமன்றத்தில் வாதம் செய்யவேண்டும் என்ற அவசியமில்லை.**
- **கபடில்லாமல் பேரமில்லை என்பதில்லை.**
- **திருடியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் பணப்புழக்கத்திற்கு இல்லை.**
- **பொய் சொல்லியாக வேண்டும் என வாழ்வு நம்மை வலியுறுத்தவில்லை.**
    - *சீட்டாட்டம், சட்டமன்றம், பேரம், பணப்புழக்கம், வாழ்வு ஆகியவை சூது, வாது, பொய், கபடு, திருட்டுக்கு இன்று ஏற்ற அரங்கங்களாக அமைகின்றன.*
    - ***இவற்றை எல்லாம் செய்வது மனிதன்.***
    - ***மனிதனுக்குச் choice உண்டு. நேராகவும் போகலாம், எதிராகவும் நடக்கலாம்.***
    - ***இன்று மனிதன் தன் சௌகரியத்திற்காக எப்படியும் போகிறான்.***
    - ***இவ்வரங்கங்களில் முழுவதும் நேர்மையாக மனிதனால் இருக்க முடியும். ஆனால் செய்வதில்லை,***



என்பதுபோல் சத் முதல் ஜடம்வரை எல்லா லோகங்களும் அறியாமையின்றிப் படைக்கப்பட்டுள்ளன. மனித மனம் இரு வகைகளாகவும் செயல்படக் கூடியது. அதன் ஆதி சத்திய ஜீவியம். தன் ஆதியை மனம் மறக்காதவரை அறியாமை எழுவதில்லை. மனம் அதை மறப்பதால் அறியாமை எழுகிறது. எழுந்த அறியாமை வாழ்வில் வலுப்பட்டு, ஜடத்தில் பூர்த்தியாகிறது.

நாம் ஜடம் முழுவதும் அறியாமையால் நிரப்பப்பட்டதாக அறிவோம். ஜடம் அறியாமையிலிருந்து விடுபட்ட நேரம் ஆனந்தமயமாகும். அதுவே பரிணாமத்தின் சிகரம். பிம்பம் கண்ணாடியில்லை. நாம் கண்ணாடி முன் நிற்பதால் பிம்பம் ஏற்படுகிறது. கண்ணாடிக்குப் பிம்பம் வேண்டும் என்ற அவசியமில்லை. சொத்துரிமையோ, திருமணமோ வாழ்விற்கு அவசியமில்லை. நாம் திருமணத்தை நாடினால், சொத்துரிமையை ஏற்படுத்தினால் சமூகம் அவற்றை ஏற்கிறது. வாழ்விற்கோ, சமூகத்திற்கோ சொத்துரிமை தேவையில்லை.

❊❊❊

# அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொசைட்டியின் வெளியீடுகள்

கர்மயோகியின் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | மனம் - ஜீவனின் முக்கிய கரணம் | ரூ. 20 |
| 3. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 4. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 5. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 6. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 7. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 50 |
| 8. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 9. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 10. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |
| 11. | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.100 |
| 12. | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. 20 |
| 13. | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. 20 |
| 14. | யோக வாழ்க்கை விளக்கம் - I | ரூ. 80 |
| 15. | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. 60 |
| 16. | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.150 |
| 17. | வாழ்வின் அடிச்சுவடுகள் | ரூ. 60 |
| 18. | அன்னையின் வாழ்வில் | ரூ. 80 |
| 19. | அபரிமிதமான செல்வம் | ரூ. 50 |
| 20. | சரணாகதியின் ஆன்மீகச் சிறப்பு | ரூ. 50 |
| 21. | Luck | ரூ. 50 |
| 22. | Prosperity and Spirituality | ரூ.100 |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

## விவரம் தெரியாத பயம்

பயம் என்பது விபரம் தெரியாததால் எழுவது. அன்னை என்றொருவர் இருக்கிறார் என்ற விவரம் தெரிந்தால் பயம் என்பது இருக்காது. முதன்முறையாக கோர்ட் சம்மன் வந்தால், அதுவும் அது கிராமத்து வீடானால், வீடு திகில் மயமாகி, திவாலானது போலிருக்கும். அதுவே வக்கீலுக்கு வந்தால் அதை வெறும் தபாலாகக் கருதுவார். அவருக்கு விபரம் தெரியுமாதலால் பயம் எழாது. மனைவி அடிக்கடி தூக்குப் போட்டுக்கொள்வதாகச் சொல்வதும், கணவன் பீதியடைவதாகவுமிருந்த வீட்டில், கணவனுக்கு விவரம் தெரிந்தவுடன் - அவள் சும்மா சொல்கிறாள் என்பது விவரம் - பயம் போய்விட்டது என்பது பழைய கதை.

வேலையை சஸ்பெண்ட் செய்தனர், வந்த வியாதி பெயர் கான்சர், மகன் ரேஸுக்குப் போகிறான், கணவனைக் கைது செய்தனர் என்பவை எவரையும் உலுக்கும் செய்திகள். குலை நடுங்கும் நிகழ்ச்சிகள். அன்னையை அறியாதவர்க்கு பயம் உண்மை. அன்னையை அறிந்தவர்க்கு அச்செய்தி பொய் என வரும். அல்லது நேரடியாகப் போனால் பிரச்சினை தீரும் என்று தெரியும். ஆபத்தை ஊர்ஜிதம் செய்தாலும் பிரார்த்தனைக்கு அது விலகும். **அன்னையை அறிவது பாக்கியம், அதிர்ஷ்டம் என்று நான் கூறுவதற்கு இதுவே காரணம்**.

- ❋ விவரம் தெரியாவிட்டால் பயம் எழும்.
- ❋ பயம் என்பதே அன்னை என்றொருவர் இருக்கிறார் என்ற விவரம் தெரியாத காரணத்தால்தான்.
- ❋ அன்னை நினைவு நிறைவு தருவதால் பயத்தின் வேரை விலக்குகிறது.

✯ ✯ ✯

## அன்னையை மட்டும் நம்பவேண்டும்

பெரிய முதலாளிகள் ஆபத்தான நேரங்களை சமாளிக்க ஆபத்தான மனிதர்களைப் பயன்படுத்துவார்கள். கூர்க்கா செய்யும் வேலையை முதலாளி செய்ய முடியும் என்றாலும் செய்வது சரியில்லை. பாக்கிதாரார்களைச் சமாளிக்க, முரட்டுத் தொழிலாளிகளை அடக்க, சட்டத்தை நமக்கு எதிராகப் பயன்படுத்துவதிலிருந்து தப்பிக்க, மானேஜர், செக்கூரிட்டி, வக்கீல் ஆகியவர் முதலாளிக்குப் பயன்படுவர். ஒரு கிராமத்தில் ஒரு பாக்டரி செயல்பட வேண்டுமானால், அந்த ஊர் நாட்டாண்மைக்காரனை பாக்டரி தன்னிடம் வேலைக்கு வைத்துக்கொண்டால், ஊர், முதலாளிக்குக் கட்டுப்படும். அது போன்று ஒரு முதலாளியும், அவர் பாக்டரியில் வேலை செய்யும் நாட்டாண்மைக்காரனும் ரோட்டில் வந்துகொண்டிருக்கும்பொழுது ஒருவன் குடித்துவிட்டு முதலாளியிடம் சண்டைக்கு வருகிறான். நாட்டாண்மைக்காரன் ஓடிப்போய் அவனை அடக்குவதற்குப் பதிலாக முதலாளி என்ன செய்கிறார், தன்னை உதவிக்குக் கூப்பிடுகிறாரா என வேடிக்கைப் பார்க்கிறான். முதலாளிக்கு அவன் மனம் புரிந்தது. ரோட்டில் சற்று நின்றார். குடிகாரனை நோக்கி “ஏன் அங்கிருந்து பேசுகிறாய், கிட்டே வா” என்றார். அவன் சத்தம் சற்று அடங்கியது. தன் உதவியில்லாமல் முதலாளிக்கு நிலைமை அடங்குவதைக் கண்ட நாட்டாண்மைக்காரன் குடிகாரன் மீது பாய்ந்தான். நாட்டாண்மைக்காரனை நம்புவதைவிட தன்னையே நம்புவது சரி என முதலாளி அறிந்தார். மனிதன் அன்பிற்காக, நேர்மைக்காக, கடமைக்காக உதவி செய்யமாட்டான். ஆதாயத்திற்காக உதவ முன்வருவான். ஆதாயத்திற்காக வரும் உதவி அவசியமானவற்றைச் சாதிக்காது. “நேரம் வந்தால், மனிதர் சாயம் வெளுக்கும்” என்பது அனுபவம்.

- ✪ **மனிதர்களை நம்ப முடியாது என அறிவது விவேகம்.**
- ✪ **அன்னையை மட்டும் நம்பவேண்டும் என்பது ஞானம்.**

✯ ✯ ✯